திராவிடநாடு

30—9—62 | வார வெளியீடு | விலை 16 காசு

வெற்றி முழக்குவோம்!

[ந. அலி, பி. ஏ.]

எட்டுத் திக்கும் அதிரும் வண்ணம்
வெற்றி முழக்குவோம்!
எம்மினத்தார் வென்ற சேதி
எங்கும் சொல்லுவோம்!
நட்டு வைத்த கொடியின் கீழே
ஒன்று கூடுவோம்
ஞாலம் போற்றும் திராவிடத்தின்
வாழ்த்துப் பாடுவோம்!

வீரம் வென்ற கதையைக் கூறி
மகிழ்ச்சி கொள்ளுவோம்
விடுதலையை உயிரைப் போல
என்றும் பேணுவோம்!
சார மற்ற தத்துவங்கள்
தம்மைப் பேசியே
தரணி மீது வாழும் நிலையை
விரட்டி ஓட்டுவோம்!

நாட்டிற் காகத் தியாகம் செய்யும்
உறுதி பூணுவோம்
நன்மை செய்யும் எண்ணத் தோடு
பணிது வங்குவோம்!
வாட்டும் கொடுமைப் பிணிகள் மடிய
வழிகள் செய்குவோம்
வளரும் மக்கள் கரத்தில் நாட்டின்
ஆட்சி நல்குவோம்!

கண்ணுள் புகுந்தானடி கள்வன்!

செங்கதிரும் வெங்கதிராய் மாறிவிட்டது. செங்கயல் விழிதனை ஏனம்மா இன்னும் மூடிக்கிடக்கிறாய். எங்கெங்கோ பூத்த மலரெல்லாம் எடுத்தோடி வந்தேன். எழில் சிந்தும் சரம் தொடுத்து குழல் முடித்து நீ நடப்பதனைப்பின்னிருந்து கண்டு பெருமகிழ்வு கொள்ளுதற்கு.

கண்ணல்ல! என் மகளே! கண் விழியம்மா! உன் செவிலித்தாய் நான் கெஞ்சுவது உன் காதில் விழவில்லையா? அன்னை வருமுன்னே விழிமகளே! அவள் என்னைக்கு முன்னே எழு மகளே. பெண்ணைப் பாரென்று உன்னை மட்டுமல்ல, பெண்வளர்த்த அழகைப் பாரென்று என்னையும் நகுவாள் அன்னை. என்னம்மா கண்ணில் ஏதேனும் எரி வீழ்ந்ததா? சொல்லம்மா?

தாயே! தயை செய்து என்னைத் தொல்லைப்படுத்தாதே. என் உயிரைப் பிரித்தாலும்... என் கண்ணைத் திறவேன். என் கண்ணில் என்னென்றும் சொல்லேன்.

இதோ உன் தோழி வந்துவிட்டாள். . . அவளிடமாவது சொல்லம்மா என்னவென்று!

என்னம்மா தலைவிக்கு. என்ன வந்தது.

நீயே கேளடி உன் தலைவிக்கு என்ன வந்ததென்று. மதியம் வரப்போகிறது, மூடிய இமைகளைத் திறக்க மறுக்கிறாள்; நெஞ்சணைத்த கையோடு பஞ்சணைத்த மெத்தையில் புரள்கிறாள்; என்னம்மா எனக் கேட்டால் சொல்ல மறுக்கிறாள். நீயாவது கேட்டுச் சொல் என்ன நடக்கிறது இமைக்குள்ளே என்று.

தலைவி!

என்னடி தோழி! தாயைப் போகச் சொல். போனதன் பின் கதவைத் தாழிட்டு வா. இமைக்குள்ளே நடப்பது என்னவென்று சொல்கிறேன்.

தாயே! நான் கேட்டுச் சொல்கிறேன் நீ வெளியில் இரு. தலைவி! தாயும் போய்விட்டாள். தாழும் போட்டுவிட்டேன். கண்ணைத் திறவுங்கள். கதையைச் சொல்லுங்கள்.

போடிபோ! கண்ணைத் திறந்துதான் கதை சொல்ல வேண்டுமோ? கண்ணிமையை நான் திறவேன். கதை வேண்டுமென்றால் சொல்கிறேன் கண்ணிமையை மூடியபடி! சொல்லவா தோழி!

ந. இறைவன்

கண்ணுள் என்னவாம் தலைவி! கவலைக்கிடம் ஒன்றுமில்லையடி தோழி!

சரி சரி சொல்லுங்கள் என்ன நடந்ததென்று.

பூந்தேர் ஏறிவந்தார் தோழி!

பூவையுன்னையும் அழைத்துச் சென்றாரோ தலைவி!

நல்ல கேள்வியடி. பூவை நானில்லாப் பூந்தேர் எதற்கடி அவருக்கு. பாவை நான் இல்லையென்றால் பாவேந்தர் அவர் நெஞ்சில் பாவும் பிறக்காது. பாரில் பூவும் சிரிக்காது, புதுமையும் தோன்றாது.

ஏந்திழையே வா என்றார். பூந்தேரில் ஏறுதற்குத் தயங்கி நின்றேன். பூந்தேரை விட்டிறங்கி ஏந்தவோ ஏந்திழையே என்பது போல் இரு கையையும் நீட்டினார். அவரின் இருகையில் இளங்கொடி போல் நான் துவண்டேன். துகிலென என்னைத் தோள்தனில் வளைத்தார். நா[illegible]கிலென அவர் தோளில் தவழ்[illegible]தேன். தேரேறித் தெருவதிரத் தேரை வி[illegible]டினார்.

எங்கெங்கே போனீர்கள் தலைவி?

பொங்கும் நிலவொளி பூத்திருக்கும் காடெல்லாம் போயினோம் தோழி! சங்கத் தமிழிசையில் பொங்கருவி பாடுவதைக் கேட்டோம். பார்ப்பவர்தம் உள்ளத்தை ஈர்த்துவிடும் எழில்மிகு மலை; சின்னம் சிறு நீரோடைகள்; அதன் மருங்கில் சிரிக்கும் மலர்களைத் தாங்கித் தவழ்கின்ற பூங்கொடிகள்; தேன் உண்ணும் வண்டுகளின் இனிக்கும் இயற்கைப் பண்; அழகு மலர்சூடி ஆடிவரும் வெள்ளத்தின் அழகுமிகு காட்சி; மணம் பரப்பியோடும் மலர்க்கொத்தைஅடைவதற்குப் பாட்டாளியின் உடல்மிசை வடியும் வியர்வையை ஒத்து அந்த சிற்றாற்றின் நெடும்பயணக் களைப்பில் தோன்றிய வியர்வைகள் அனைத்தும் வெண்ணுரைகளாய் விரையும் காட்சி; மலர்க்கொத்தை நுரை சூழ, அது பைய நகர்ந்து! ஐயோ விடுங்கள் கன்னியரின் கருங்குழலில் போய் அமர்ந்தால் அல்லவோ கருப்போடு சிவப்பிணைந்து சிறப்புத்தரும் என்று செவ்வல்லி அல்லற்படும் காட்சி; கருமுகிலைக் கண்டுவிட்டால் களித்தாடும் மயிலினங்கள் மழைபட்டு நனைந்துவிட்டதால் தன் தோகைதனை விரித்து ஈரத்தைப் போக்கிக் கொண்டிருக்க; அதன் தோகையைத் தன் அலகால் கொத்திப் பார்த்து மகிழ்ந்திடப் பேடை; பெண்

(15-ம் பக்கம் பார்க்க)

தமிழே பயிலும் மொழி

3

மலர் 21] ஆண்டு சந்தா ரூ. 8 (30—9—62) தனிப்பிரதி 16 காசு [இதழ் 5

"தமிழ் மிகவும் ஆற்றல் வாய்ந்த மொழி. பல ஆயிரம் ஆண்டுகளாகப் பேச்சு வழக்கில் இருந்துவரும் ஓர் உயர் தனிச் செம்மொழி. தமிழ்மொழி மூலம் பொறியியல், மருத்துவம், தொழில் நுட்பக் கல்வி, அறிவியல் முதலிய எந்தத் துறையும் கற்றுக்கொள்ள முடியும். கற்பிக்க முடியும்" இவ்வாறு கூறியவர் தமிழகத்திற் பிறந்து, அதன்வழி தமிழ் மாட்டுப் பேரார்வம் கொண்டு தமிழின் பெருமையினை மிகைபடக் கூறிவிட்டார் என்று எடுத்துக்கொள்ளும் நிலையிலிருக்கும் தமிழ் நாட்டுத் தமிழ்ப் பேரறிஞர் ஒருவர் அல்லர்.

இவ்வாறு கூறியுள்ளவர் செக் நாட்டிற் பிறந்து செக் மொழிபால் மாறாத பற்றுக்கொண்ட தமிழறிஞர் ஒருவர்; — அண்மையில் நம் திருவிடத்திற்கு வருகை தந்திருந்த தமிழறிஞர் கமில் சுவலபில் என்பார்.

இப்படி வேற்று நாட்டு மொழியறிஞர் ஒருவரே எடுத்துச் சொல்லும் அளவு எல்லாச் சிறப்பும், எல்லாப் பொலிவும், எல்லா அழகும் ஒருங்கே கொண்டு இலங்கும் நம் மொழியாம் தமிழ் என்னும் உயிரைப் பள்ளியிலும், கல்லூரியிலும் பயிற்சி மொழியாக்குதற்கு ஏனோ தமிழகத்து அரசு தயங்குகின்றது? இந்த அரசின் நிலை கண்டு நாம் வியப்பதா? வருந்துவதா? அழுவதா? அல்லது சிரிக்கத்தான் முடியுமா எம்மால்?

தமிழை மட்டும் பயிற்சி மொழியாகக் கொண்டு பாடங்கள் நடந்த இரண்டொரு கல்லூரிகளிற் பயில்கின்ற மாணவர்களைப் பற்றி — அவர்கள் தேர்வுகள் எழுதிய பின்னர் — குறிப்பிட்ட சில கல்வியறிஞர்கள் அவர்கள் பொது அறிவில்—வேறு வேறு துறைகள் பற்றிய அறிவில்—சிறந்து விளங்கியது பற்றியும், அதே வேளை ஆங்கிலத்தைப் பயிற்சிமொழியாகக் கொண்டுள்ள கல்லூரியிற் பயின்றுவந்த மாணவர்களைவிடச் செம்மையான ஆங்கில அறிவு பெற்றிருப்பதுபற்றியும் சிறப்பித்தே கூறியுள்ளார்கள். இதன் வழி தமிழ் பயிற்சி மொழியாவதற்கு எல்லாத் தகுதியும் பெற்றது என்பது செயல் அளவிலும் மெய்ப்பிக்கப் படுகிறது.

"எந்த ஒரு நாட்டிலும் அவரவருடைய சொந்த மொழியிற் கூறினால்தான் உண்மையான அறிவைப் புகட்ட முடியும். இதை எந்த அறிஞரும் மறுப்பதற்கில்லை. சொந்த மொழியில் கூறுவது கூடாது என்று மறுப்பவர்கள் வெறும் பதவிப் பித்துக் கொண்டவர்களாகத்தான் இருக்கமுடியும்."

இவ்வாறு சொல்வதன் மூலம் தமிழ்மொழி, பயிற்சி மொழியாகியே தீரவேண்டும் உடனடியாக என்பதைப் பொறுப்பு வாய்ந்த தமிழறிஞர்கள் எல்லாம் வலியுறுத்தி விட்டார்கள்.

இந்த நிலையிலும் ஆட்சிப் பலகையிலிருப்போர் தமிழைப் பயிற்சி மொழியாக்குவதற்குத் தயங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்றால், அதன் முன்னிலை என்ன? கல்வித் துறையில் பொறுப்பு வகிக்கும் சில சுயநலவாதிகளின் நிர்வாக வசதிகள் பாதிக்கப்படக் கூடாது என்று கருதி அவர்களின் மன நிறைவுக்காகத்தான் இப்படிச் செய்கின்றார்களோ என்று நாம் ஐயுறுகின்றோம்!

மக்கள் விருப்புக் கிசையத்தான் அரசு நடக்க வேண்டும். அரசு விருப்பத்துக்கேற்ப மக்கள் நடப்பது குடியாட்சி நெறிக்கு முரணானது என்பதை அறியாதாராக இன்றைய தமிழக அரசினர் இருப்பர் என்று நாம் நினைக்கவில்லை. "கிராமங்களில் பெரும் அளவில் விழிப்புணர்ச்சி தோன்றியிருக்கிறது. அவர்களின் கோரிக்கையை மறுப்பது முடியாத காரியம்" என்று அரசு தரப்பினரே கூறிவருகின்றனர். "தமிழ்மொழி மீதுள்ள வீறு என்றும் குறைந்துவிடக்கூடாது. நம்முடைய மொழியும், பண்பாடும் இடையறாமல் வளர்ந்து வந்திருக்கின்றன. அவற்றைப் பாதுகாக்கவேண்டியது தமிழரின் இன்றியமையாக் கடமை" என்று சராசரித் தமிழரும் உணர்ந்துவிட்ட இன்றைய சூழ்நிலைக்கேற்ப அரசு செயல்புரிய முன்வரும் என்று எதிர்பார்க்கின்றோம்.

இன்றைய நிலையில் நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும் இல்லாத யாரும் பொதுத் தொண்டர் என்று தம்மைக் கூறிக்கொண்டு மக்களிடையே உலவமுடியாது. இந்த உண்மையை நல்ல தனிச் செம்மொழியைப் பேச்சிலும், எழுத்திலும் பயன்படுத்துவோரைப் பார்த்து ஒரு சமயம் எள்ளிய பாங்கினர்கூட, இன்று தமிழுக்காகக் கச்சை கட்டிக்கொண்டு வந்து நிற்குமொரு நிலைமையே மெய்ப்பிக்கின்றது. அன்னோரின் மெய்யுணர்வு கண்டு யாம் மகிழ்கிறோம்!

இதே வேளை மற்றொன்றையும் நாம் மறந்துவிடக் கூடாது.

நம் மொழியின்பால் நாம் காட்டுகின்ற பற்று ஆங்கிலத்தின்பால் நாம் காட்டும் பெரு வெறுப்பாக மாறிவிடக்கூடாது. அவ்வழி இந்தியென்னும் வெற்றுமொழி இங்கே ஊன்றி உட்கார்ந்துகொள்ள இடம் கொடுத்துவிடக்கூடாது.

நம் மொழி இருக்கவேண்டிய இடத்தில் வேற்று மொழி எந்த உருவில் எந்த இடத்தில் புகுந்துகொண்டிருந்தாலும் அதனையெல்லாம் அழித்தொழித்தே தீர வேண்டும். அதுவே உண்மையான மொழிப்பற்று, அதுவே உண்மையான நாட்டுப்பற்று.

★

விடுதலை வாழ்வு

திராவிட நாடு விடுதலை பெற்றுவிட்டால், அந்தக் கணமே இங்கு குடியாட்சி இருக்காது. இராணுவம் தான் இந்த நாட்டை ஆளும் என்று சிலர் ஆராய்ந்து பாராத—தெளிவில்லாத முடிவை வைத்துக்கொண்டு ஏதோ ஒரு மூலையில் நின்றுகொண்டு வெற்றுக் குரல் எழுப்புகின்றார்கள். 'ஐயோ பெரிய இந்தியாவையா உடைப்பது! கூடாது கூடாது! இது அநியாயம்! இது தேசத் துரோகம் என்று கூறுகின்றன வேறு சில உதிரிகள். இப்படிப்பட்டவர்கள் பெரிய இந்தியா என்று சொல்வது எதை என்று கேட்கக் கிளம்பினால், அதற்கு எப்படி அவர்கள் பதில் சொல்வார்களோ! அசோகர் காலத்திலும் அக்பர் காலத்திலும் இருந்த பாரத வர்சத்தைப் பெரிய இந்தியா என்கிறார்களா? அல்லது கனிஷ்கன் காலத்தில் அவனுடைய சாம்ராஜ்யமாக இருந்த பகுதியைப் பெரிய இந்தியா என்கிறார்களா? அல்லது ஆங்கிலேயன் காலத்தில் பலுச்சிஸ்தானம் முதல் கிழக்கே பர்மா நாட்டை உள்ளடக்கிய பகுதி முழுதும், வடக்கே மாக்மோகன் எல்லைக் கோடு எனப்படுவதிலிருந்து தெற்கே இலங்கைத் தீவை உள்ளடக்கிய நிலப்பகுதி, கடற்பகுதி அனைத்தையும் சேர்த்துப் பெரிய இந்தியா என்கிறார்களா? அசோகர் காலத்திலும், கனிஷ்கர் காலத்திலும் ஆப்கானிஸ்தானம் இந்தியாவாக இருந்தது. அப்போது நாம் வாழும் இந்த நிலப்பகுதியில் வாழ்ந்திருந்த பெருமக்களுக்கு—நம் முன்னோர்க்கு அந்த அசோகனும் கனிஷ்கனும் வேற்று நாட்டு மன்னர்கள் அல்லது மன்னர் மன்னர்கள். பின்னர் வந்த ஆங்கிலேயன் காலத்துப் பெரிய இந்தியாவாக இருந்த பகுதிகள் பர்மாவும், இந்தியாவும், பாகிஸ்தானும் இன்று, 'ஐயோ இந்தியாவைப் பிரிக்கப் பார்க்கிறார்களே' என்று வேறு உருப்படியான அலுவல் பார்க்கத் திறனற்றுப்போன காரணத்தால் கூச்சல் கிளப்பும் சீனாவின் நண்பர்களோ, மற்ற ஏக இந்தியா வாதிகளோ பர்மாவை இந்தியா என்று சொன்னால், பாகிஸ்தானை இந்தியா என்று சொன்னால், இலங்கையை இந்தியா என்று சொன்னால், அந்தந்த நாட்டுக்காரர்கள் சும்மா இருக்கமாட்டார்கள். நேருவின் இந்தியாவிலோ ஆரம்பக் கட்டத்தில் — அண்மைக் காலம் வரை—இந்தியாவாக இருந்த பெருபாரியை இன்று இந்தியா என்று சொன்னாலோ, சொல்கின்றவர்கள் பைத்தியக்காரப் பட்டம் கட்டிக் கொள்வார்கள் என்ற நிலைமை மட்டும் இருந்தால் பரவாயில்லை.

க. இராசன்

சில தோழர்களும், அரசியலை எப்போதும் தலைகீழ் பாடமாகவே படித்துப் பழக்கப்பட்டோரும் திராவிட நாடு விடுதலை பெற்றுவிட்டால், அடுத்த கணமே அமெரிக்காக்காரன் வந்து இங்கே குந்திக் கொள்வான் என்று ஒரு பெரிய உண்மைக் கலப்பில்லாத பொருளை வாங்கி மக்கள் முன் வைத்து விலை கூறிக்கொண்டிருக்கிறார்கள். (இத்தரத்தைச் சேர்ந்தோரிடம் எந்தக் காலத்திலும் உண்மை பிறப்பதில்லை; — விளைவதில்லை. இவர்கள் உண்மை விற்பனைப் பொருளாகக் கிடைக்கும் என்ற எண்ணமுள்ளவர்கள். எனவே, உண்மையை விலைக்கு வாங்க எண்ணும் இவர்கள் அதை விற்கவும் விரும்பலாமல்லவா?) வேறு சிலர் பெரிய இந்தியாவுடன் சேர்ந்திருந்தால்தான் திராவிடத்து மக்கள் பிற பகுதிகளில் பாதுகாப்பாக வாழலாம் என்றொரு அறிவாராய்ச்சி இல்லாத செய்தியை எடுத்துக் கூறித் திராவிட விடுதலைக்குக் குறுக்கே நிற்கப் பார்க்கின்றனர். இத்தரத்தார் மொசாம்பிக் போன்ற பகுதிகளில் போர்ச்சுகீசியர்கள் இந்தியர் எனப்படுவோர்க்கு இழைக்கின்ற இன்னல்களையும், ஆங்கிலேயன் காலத்திலிருந்தே தென்னாப்பிரிக்க வெள்ளையர் இன ஒதுக்கல் என்னும் மனித நீதிக்கு ஒவ்வாத சட்டத்தின்மூலம் இந்தியர் எனப்பட்டோர்க்கு செய்துவரும் கொடுமைகளையும் இந்த நாட்டு மக்கள் அறிந்திருக்கமாட்டார்கள் என்ற ஏதோ பொருளற்ற தென்போடுதான் இப்படிச் சொல்லித் திரிகிறார்கள் போலும்!

உண்மையில் வெளிநாட்டிலுள்ள திராவிட இன மக்கள் அல்லலுக்கும் அவதிக்கும் உள்ளாகிக் கிடக்குமொரு துன்பநிலைக்கே காரணம், இந்தியத் துணைக்கண்டத்து அரசு அங்கங்கே அல்லலுக்கிலக்காகிக் கிடக்கும் திராவிட இனமக்களை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு பார்ப்பதேதான் என்பதைச் சொந்த இலாபங்கருதி மூடி மறைத்துவிடலாம் என்று பார்க்கின்றனர் இத்தரத்தார்.

சிறிய நாடாக இருப்பதே பாதுகாப்பற்றது என்று கூறப்படும் வாதம் (திராவிடம் அப்படியொன்றும் சிறிய நாடு அல்ல) பைத்தியக்காரர்களின் வாதம் என்பதை இன்றைய கியூபா நாட்டைப்பற்றி அறிந்துள்ள யாரும் ஒப்புக்கொள்ளாமலிருக்க முடியாது.

(13-ம் பக்கம் பார்க்க)

"ஏன் அழுதான்....?"

தமிழ்ச்செல்வன்

தன்னாட்சி, தனியாட்சி, சுயாட்சி, சுதந்திர ஆட்சி என்று சொல்லிப் பெருமைப்பட்டுப் பெருமிதத்தோடு உலாவரும் காங்கிரசாட்சி ஏற்பட்ட இந்தப் பதினைந்து ஆண்டுகளுக்குள் எத்தனை எத்தனை சீர்கேடுகள் ஏற்பட்டுவிட்டன என்று எடுத்தியம்ப இயலாது.

இங்கிருந்து வயிற்றுப் பிழைப்புக்காக ஈழம் சென்ற தமிழ் மக்கள் அங்குபடும் அவதியை எடுத்துரைக்க முடியாது-சிங்கள ஆட்சியினர் புரியும் கொடுமைகள் கொஞ்சமல்ல.

ஈழத்தில் வதையும் தமிழ் மக்கள், அங்கும் வாழமுடியவில்லை. அங்குதான் வாழ முடியவில்லையே, பிறந்ததும்—தமிழகம் சென்றேனும் வாழலாமா என்றாலோ, "கள்ளத்தோணி" பட்டம் கட்டப்படுகிறது.

இதையும் மீறி ஒறிருவர் இங்கு வந்துவிட்டாலோ, அவர்களுக்குப் பிழைப்புக் கிடைப்பதில்லை. இரண்டுங்கெட்ட நிலையில் நின்று அல்லற்படுகிறார்கள்.

இந்த அவலநிலையை விளக்குகிறது இந்தக் கட்டுரை.

—ஆசிரியர்.

பரட்டைத்தலை—பஞ்சடைந்த கண்கள்—கந்தல் துணி— எலும்பும் தோலுமான தோற்றம். பராரியாக நடந்துகொண்டிருந்த அவன் இன்று பட்டினிப் பட்டாளத்தின் முதல் அங்கம்.

பசிக்காகப் பானை ஏந்தியவனல்ல அவன். பண்பாளன்; எழுத்தாளனும்கூட. வேலை கிடைக்காத காரணத்தால் வேதனைக்குரியவனானான். எழுதித்தான் அவன் வாழவேண்டுமென்று நினைக்கவில்லை. எந்த வேலையாக இருந்தாலும் அவன் செய்யத் தயாராய் இருந்தான்.

பரிதாபத்திற்குரியவனுடைய அனுபவம் அப்படித்தான் அறிவுறுத்தியது.

இருந்தும் அவன் சூழ்நிலையால் சோதனைக்குரியவனானான். இதனால் அவன் சோற்றுக்கு மட்டுமல்ல—உடுப்பதற்கும்கூட வழியற்றவனாகி விட்டான்.

அதன் பலன்.........?

நாளெல்லாம் வேலை தேடி அலைந்து அலைந்து அலுத்துப்போய் விட்டான்.

முடிவு.........?

கடற்கரையில் நின்றுகொண்டிருந்த அவன், பேரிரைச்சலோடு பெருகி வரும் அலைகளையே வெறித்து நோக்கிக் கொண்டிருந்தான்.

அப்போது வானொலியின் ஒலி பெருக்கி அலறியது.

"ஆகாஷ்வாணி மதருஸ் நிலையம். செய்திகள் வாசிப்பது நாகராஜன்."

இதைக் கேட்டதும் அவன் கரங்கள் அவனையும் அறியாமல் காதுகளை மூடிக்கொண்டன.

"ஈழத் தமிழரே! அன்று உன் பெருமை உணராது வெறுத்தொதுக்கிவிட்டு வந்தேன். இன்று வேதனைக்குள்ளாகி வாதைப்படுகிறேன். வெந்த உள்ளத்தோடு நொந்து செத்துக்கொண்டிருக்கிறேன். இங்கு தமிழுக்கு இடமில்லை. தமிழருக்கு வாழ்வுமில்லை. ஐயோ தமிழகமே! திராவிடமே" என்று வாய்விட்டுக் கதறினான்.

*

"இன்று முதல் இலங்கையில் எல்லா அரசியல் அலுவல்களும் சிங்கள மொழியில்தான் நடைபெறும் என்ற சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. இதை எதிர்த்து இலங்கைவாழ் தமிழ் மக்களெல்லாம் மறியல் செய்தார்கள். கடையடைப்பும் கண்டன ஊர்வலங்களும், பொதுக்கூட்டங்களும் நடைபெற்றன. சில இடங்களில் அமைதிக்குப் பங்கம் ஏற்படும் என்று ஊர்வலங்களுக்கும் பொதுக்கூட்டங்களுக்கும் தடை விதிக்கப்பட்டது. தடை உடைபடவே காவலர்கள் தடியடிப் பிரயோகமும் கண்ணீர்ப் புகையையும் பிரயோகம் செய்தார்கள். இதனால் பலத்த மோதல் ஏற்படவே, துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. நான்கு முறைகள் சுட்டார்கள். இதில் அறுவர் இறந்தனர். பலர் படுகாயமடைந்திருக்கின்றனர். இறந்தவர்களில் இளங்கோ என்ற இளைஞரும் ஒருவர். இவர் ஒரு கல்லூரி மாணவர் என்பதுகுறிப்பிடத்தக்கது" இதற்குமேல் அவனால் செய்திகளைச் செவிமடுக்க முடியவில்லை.

கரையில் நின்றவன் கடலில் சில அடிகளைக் கடந்தான். பின் நின்றான். நீண்டு கிடந்த நீலக்கடலை வெறித்து நோக்கினான்.

ஏதோ ஒரு பிரமை. கப்பலொன்று ஆடி அசைந்து வருவது போன்ற மனத்தோற்றம்.

கண்களிலே கண்ணீர் கசிய ஆரம்பித்துவிட்டது. உதடுகள் துடித்தன.

"இளங்கோ! நீ......நீதான் தமிழ் வீரன். தியாகி!! நான்......நான் ஒரு கோழை, இளங்கோ! நானொரு கோழை."

கடலைப்போல் இதயம் குமுறிற்று. கண்கள் கண்ணீர்க்குளமாயின. நீர்த்திவலைகள் பார்வைக்குத் திரைபோட்டன.

இதயம் நீண்ட நெட்டுயிர்ப்பு விட்டது. நினைவலைகள் கடந்த காலத்தை நோக்கி ஓடின.

அங்கே............

*

அல்லித் தோட்டத்தின் பெருமை தனைச் சொல்லி முடியாது—புகழில்லா இயற்கை வளத்தில்.

அது ஒரு தேயிலைத் தோட்டம். தன்னகத்தே பல சிற்றோடைகளையும், சில நீர்வீழ்ச்சிகளையும் கொண்டுள்ளது.

சிற்றோடைகளின் நீரோட்டம்—தெம்பாங்கு பாடுவதைப் போலிருக்கும்.

நீர்வீழ்ச்சிகளின் பேரொலி—கடந்தகால வரலாற்றின் போர்ப்பரணியை நினைவூட்டும்.

மாந்தளிர்களையும் மிஞ்சிய தேயிலைக் கொழுந்துகள்—நம் மொழியின் வளத்தை எடுத்துக் காட்டும்.

பகல் இரவு என்று பாராது பாடுபடும் பாட்டாளிகளின் அழைப்பு—நம் தலைமுறையின் வீரத்தை எண்ணிப் பார்க்கச் செய்யும்.

இந்தச் சூழலில்தான் வேலவன் பிறந்து வளர்ந்தான்.

அவன் தன்னை ஒரு தேயிலைத் தோட்டத் தொழிலாளியின் மகன் என்பதைவிட, ஒரு தேயிலைத் தோட்டத் தொழிலாளியின் தம்பி என்று சொல்லிக் கொள்வதில்தான் பெருமைப்பட்டான்.

காரணம்.........?

அவன் தந்தையின் அணைப்பிலே வளர்ந்தவன் அல்ல. அவனுக்கு விபரம் தெரியும் முன்பே அவர் தமிழகம் சென்று அங்கேயே இறந்து விட்டாராம்.

ஆகவே, அவன் அன்னையின் அணைப்பிலே — அண்ணன்மார்களின் அன்பிலே — அவர்களின் உழைப்பிலே வளர்ந்து வந்தான்.

துன்பத்தை அவன் தொட்டுப் பார்த்ததும் இல்லை; கண்களிலே கண்ணீர் கசிந்ததும் இல்லை. பசி எப்படி இருக்கும் என்றே தெரியாது; ஆம்! அவன் கடைசிப்பிள்ளையாக இருந்ததால் செல்லமாகச், சீரும் சிறப்போடும் வளர்க்கப்பட்டான்.

அல்லித் தோட்டத்திற்கு அருகிலுள்ள சிற்றூரான நனுஓயாவில் தன் ஆரம்பகாலப் படிப்பை முடித்துக்கொண்ட வேலவன், ஐந்து கல் தொலைவிலுள்ள நகரமான நுவரெலியாவிற்குச் சென்று தன் உயர்தரப் படிப்பைத் தொடங்கினான்.

அவன் கல்லூரியின் நுழைவாயிலிலே நுழைந்த சமயம் இலங்கை அரசியலிலும் ஒரு திருப்பம் ஏற்பட்டது. இலங்கை வாழ் பெருங்குடி மக்களான தமிழர்களைக் "கள்ளத் தோணி"களாக்கி மகிழ்ந்தனர்.

ஒற்றுமையாக வாழ்ந்து வந்த சிங்கள-தமிழ் மக்களிடையே பிரிவு மனப்பான்மை பிறந்தது.

இதற்கு முக்கிய மூலகாரணமாக இருந்தவர்கள் "துட்டகைமுனு இரகசிய இயக்க"த்தினரும் "சிங்கள பெறமுன" என்ற இயக்கத்தினரும்தான்.

சிறுபான்மையினரைப் பெரும்பான்மையினர் வேட்டையாடத் தொடங்கினர்.

புது அத்தியாயம் பிறந்தது. சிங்களவெறி தலைவிரித்தாடியது. உடன் பிறப்புக்கள்போல் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தவர்களிடையே வேற்றுமைகள் வளரத்தொடங்கின.

அன்று பிற்பகல் கல்லூரி இடைவேளை நேரத்தில் தன் பிற்பகல் சிற்றுண்டியை முடித்துக்கொண்டு வேலவன் கல்லூரி நூல் நிலையத்திற்குச் சென்றான்.

ஆங்கு சில மாணவர்கள் படித்துக்கொண்டிருந்தார்கள். சிலர் தங்களுக்குப் பிடித்தமான புத்தகங்களைத் தேடிக்கொண்டிருந்தார்கள். இரண்டாவது வரிசையில் வேலவனும் ஒருவனானான்.

"மனிதமனம்" என்ற புத்தகம் அவன் கவனத்தைக் கவர்ந்தது. முதல் பக்கத்தைப் புரட்டிப் படித்தான். "மனிதமனம் எமிலிஜோலா" என்றிருந்தது.

அடுத்த பக்கத்தைப் புரட்டினான்.

"இன்றைய சமுதாயத்தில் மனிதன் என்ற உருவிலே பலர் மிருகங்களாகத்தான் நடமாடிக்கொண்டிருக்கின்றார்கள், என்று அவன் படித்துக்கொண்டிருக்கும்போது இரண்டு மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட சண்டை அவனை மேலும் படிக்கவிடவில்லை. தன் கவனத்தை அவர்கள் பக்கம் திருப்பினான்.

அவர்களிருவரும் அவன் வகுப்பில் உடன் படித்துக்கொண்டிருக்கும் மாணவர்களே.

ஒருவன் இளங்கோ. மற்றவன் சிரிசேன என்ற சிங்கள மாணவன்.

அவர்களது வாய்ச்சண்டை கைச் சண்டையில் வந்து முடியும்போலிருந்தது. புத்தகத்தை மூடி வைத்துவிட்டு எழுந்து சென்று இருவரையும் விலக்கிவிட்டான்.

இளங்கோ சொன்னான் "நாமெல்லாம் பருப்புத் தமிழர்களாம்."

இதைக் கேட்டதும் வேலவனின் இதயமும் ஆத்திரத்தால் குமுறத்தான் செய்தது. என்றாலும் அடக்கிக் கொண்டான்.

"சிரிசேன! இது நல்லதல்ல. ஒருவரையொருவர் இழிவுபடுத்திப் பேசுவது நம்மை நாமே குறைத்துக் கொள்வதாகும். நம்போன்ற மாணவர்களுக்கு அழகும் அல்ல. ஒன்று விட்ட உடன் பிறப்புக்கள்போல் வாழவேண்டியவர்கள் நாம்."

வேலவன் சொல்லிமுடிக்கவில்லை. அதற்குள் "என் விருப்பம்; அப்படித்தான் பேசுவேன்" என்றான் சிரிசேன.

"வேண்டாம் சிரிசேன."

"அப்படித்தான் சொல்வேன்."

"ஆத்திரமூட்டுகின்றாய்."

"தமிளயோ ஒக்கமே பருப்புவா" (எல்லோரும் பருப்புத் தமிழர்கள்) என்றான்.

"சிரிசேன!" வேலவன் சிறுத்தையானான்.

"தமிளயோ ஒக்கமே பருப்புவா."

"சிரிசேன!"

"தமிளயோ ஒக்கமே பருப்புவா".

அவன் சொல்லி முடிக்கவில்லை. "சிரிசேன" என்றலறியவாறு அவன் கன்னத்திலறைந்துவிட்டான்.

"பறத்தமிழயோ" என்று மீண்டும் அடிபட்ட சிரிசேனு கத்தினுன். அவ்வளவுதான். வேலவன் மிருகமாகவே மாறிவிட்டான். வெறி கொண்டுவிட்ட அவன் கரங்கள் சிரிசேனுவின் உடலோடு விளையாட ஆரம்பித்துவிட்டன.

தமிழரைப் பழித்தவனின் வாயினின்றும் நாலைந்து பற்கள் விழுந்தன. இரத்தம் வெள்ளப்பெருக்கெடுத்து அவனது வெள்ளைநிற ஆடையைச் செந்நிறமாக்கியது.

வீரம் பேசியவர்கள் தூர விலகிச் சென்றுவிட்டனர். வேலவனைத் தடுக்க இளங்கோவைத் தவிர வேறு எவரும் முன்வரவில்லை.

இளங்கோவின் இரும்புப் பிடிக்குள் கட்டுண்டுவிட்ட வேலவன் வேதனையோடு சிரிசேனுவைப் பார்த்தான்.

சிரிசேனுவின் செந்நிறமுகத்தை அவனுல் பார்க்கமுடியவில்லை. மௌனமாக நூல் நிலையத்தினின்றும் வெளியேறிவிட்டான்.

கல்லூரி முதல்வரின் அழைப்பின் பேரில் மாலை அவருடைய அறையில் சென்று சந்தித்தான். விபரம் கேட்டார். அவன் சொன்னுன்.

அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த அவர் முடிவில் சொன்னுர்.

"வேலவன்! உங்கள் இனப்பற்றையும் மொழிப்பற்றையும் காணப்பெருமகிழ்ச்சி. அதே நேரத்தில் அந்தப் பற்றும் பாசமும் வெறியாகிவிடக் கூடாது என்பதுதான் என் கவலை. ஆம் வேலவன்! நான் கூறும் அறிவுரைகள் இதுதான். ஒரு மனிதனுக்கு எதிலும் பற்றும் பாசமும் தான் இருக்கவேண்டுமே தவிர, வெறி அல்ல."

அவன் சிந்தனை குழம்பியது. எதிலும் பற்றற்றவன்போல் காணப்பட்டான்.

காணும் பொருளெல்லாம் வேருக—மாருகத் தெரிந்தன. பார்க்கும் மனிதர்களெல்லாம் அந்நியர்களாகத் தோன்றினுர்கள்.

தமிழ் — தமிழகம் — தமிழர்கள் என்ற வெறிகொண்டிருந்த அவன் உள்ளத்திற்கு இலங்கை அயல் நாடாகத் தோன்றியதில் வியப்பில்லைதான். ஆகவேதான் காலதாமதம் செய்யாது உடனே தமிழ் நாட்டிற்குப் புறப்பட்டுவிட்டான்.

பெற்ற தாயும், உற்றவர்களும் உடன் பிறந்தவர்களும் போக வேண்டாமென்று கெஞ்சினுர்கள். அண்ணிமார்கள் அழுதார்கள்.

அவன் எதையுமே பொருட்படுத்தவில்லை. எண்ணியதைச் செயல்படுத்திவிட்டான்.

ஆம்! அவன் உண்மையான தெய்வத்தைத் தூர எறிந்துவிட்டு வெறும் கல்லுக்குப் பூசை செய்யப் புறப்பட்டுவிட்டான்.

வழிபாட்டுக்குரிய தெய்வத்தை வீதியிலே எறிந்துவிட்டுக்கோயிலுக்குள் சென்றவர்கள் என்னத்தைக் கண்டார்கள்.

அதைத்தான் வேலவனும் தமிழகத்தில் கண்டான்.

தமிழகம் சென்ருல் சீரும் சிறப்புமாக வாழலாம்; தமிழ் மொழியின் இன்பத்திலே திளைத்திருக்கலாம்; பொழுதெல்லாம் தமிழின் இனிமையைக் கேட்டுக்கொண்டே இருக்கலாம் என்றுதான் அவன் நினைத்திருந்தான். ஆனுல்......

அவன் கண்டதென்ன?

சீரும் சிறப்புமாக இருக்கவேண்டிய வாழ்வு சீர்கெட்டுப்போயிற்று.

திரும்பும் திசையெல்லாம் தமிழுக்கு எதிர்ப்பு.

பார்க்கும் பக்கமெல்லாம் இந்தியின் கோர உருவம்!

தமிழ்மொழிக்கு எதிராக மாற்று மொழியின் அதிகாரம்.

என் செய்வான்?

எதை நினைத்துவந்தானே, அது இல்லை.

கையிலே காசிருந்தபோது கனிவோடு வரவேற்று, முகமன் கூறிய வர்களெல்லாம் கைப்பொருளெல்லாம் இழந்துவிட்டான் என்று தெரிந்தவுடன் கண்காணுதவர்களாகிவிட்டார்கள்.

படிப்பை நாடி வந்தவன் பணம் வரமுடியாதுபோனதால்வேலைதேடிச் செல்லவேண்டிய நிலைக்குக் கொண்டுவரப்பட்டான்.

தேடியவுடன் கிடைத்து விடுவதற்கு வேலை என்ன வீதியிலா கிடைக்கிறது?

மனிதன் எதையும் தேடிச்செல்லும்போது அது ஓடி ஒளிந்துகொள்வதுதானே இயற்கையின் கூற்று?

வேலவனுக்கு மட்டும் வேலை கிடைத்துவிடவா போகிறது? தேடினுன், தேடினுன் தேடிக்கொண்டே இருந்தான்.

தஞ்சையைச் சேர்ந்த ஒரு பெரிய மனிதர் பஞ்சையைப்போல வந்து கொண்டிருந்த அவனுக்குத் தஞ்சமளிப்பதாகக் கூறினுர்.

கொஞ்சம் பணமும் ஒரு சிபாரிசுக் கடிதமும் கொடுத்து அவனைச் சென்னைக்கு அனுப்பிவைத்தார்.

அவன் இதயத்திலே இன்பம் பொங்கி வழிந்தது. சென்னை சென்றதும் தன் வாழ்வு சீர்பெற்றுவிடும் என்று எண்ணி மகிழ்ந்தான். காரணம்?

அவன் கையிலே இருந்த சிபாரிசுக் கடிதம் ஒரு பிரபல திரைப்பட இயக்குநருக்கல்லவா!

அவனுக்கு, தானெரு திரைப்பட எழுத்தாளனுகி விட்டதாக ஒரு நினைப்பு.

நெஞ்சிலே நிறைந்த நினைப்போடு சென்னை வந்த அவனுக்கு மிஞ்சியதெல்லாம் ஏமாற்றம்! ஏமாற்றம் தான்.

பார்ப்பதற்குப் பளபளப்பாகஇருக்கும் உலகத்தில்தான் எத்துணை எத்துணை மேடு பள்ளங்கள்? சாக்கடைகள்? இதை அவன் அறிந்தபோது அவன் இதயமே வெடித்துவிடும் போலிருந்தது.

ஏமாற்றுக்காரர்களும், எத்தர்களும், பித்தர்களும் நிறைந்திருக்கும் உலகத்தில் ஏதுமறியாதஅவன் எதையுமே புரிந்துகொள்ள முடியாமல் திண்டாடினுன்.

தன் உயிரினுமுயரிய எழுத்தோவியங்கள் சிலவற்றைத் திருட்டுக் கொடுத்துவிட்டுத் திகைத்து நின்றுவிட்டான். வேறு சில, மாற்றுப் பெயர்களில் வேற்றுருவில் வெளிவந்தன.

இவ்விழிநிலை கண்டு அவன் மனம் குமுறினுலும், ஒருபுறம் தன் கருத்துக்கள் எப்படியோ நாட்டில் நடமாடுவது கண்டு, ஏழை வீட்டுப் பிள்ளை சூழ்நிலையால் பணக்கார வீட்டுப் பிள்ளையாக வளர்வது கண்டு, "என் பிள்ளை என்று" உரிமை கொண்டாட முடியாத அந்த ஏழைத்தாய் "எங்கிருந்தாலும் என் பிள்ளை நலத்தோடு வாழ்கிருன்" என்ற எண்ணத்தில் தொலை தூரத்திலிருந்தே பார்த்து மகிழ்வது போல் அவனும் மகிழ்வுற்றதுண்டு.

இத்தகைய பரந்த உள்ளம் கொண்ட அவன் இப்பொழுது வாழ வழியற்றுத் திரியும் ஓர் அனுதை. இருப்பதற்கு அவனுக்கென்று ஒரு

இடமும் இல்லை. உடுப்பதற்கும் உடைகள் பஞ்சம்.

அவன் நினைத்திருந்தால் இந்தச் சூழ்நிலையை ஒரு நொடியில் தகர்த்தெறிந்திருக்கலாம்.

ஒரே ஒரு கடிதம் எழுதினால் போதும். அவனது பராரியான கோலம் ஒரு நொடியில் பஞ்சாய்ப் பறந்துவிடும். ஆனால், அவனது தன்மான உள்ளம் தன் அவலநிலையைத் தன் அண்ணனுக்கு எழுத விரும்பவில்லை.

"தன் அருமைத் தம்பி நலம் பல பெற்று, வாழ்வில் வளம் பல காண வேண்டுமென்று கனவு கண்டு கொண்டிருக்கும் உடன் பிறந்தவர்கள் இச்செய்திகேட்டால் துடிதுடித்துப் போவார்களே! வேதனையால் வெந்து சாவார்களே! என்னால் இதை எப்படித் தாங்கிக்கொள்ள முடியும்? ஆம்! என்னால் அவர்கள் வேதனை அடையவே கூடாது."

இந்த எண்ணத்தில்தான் அவன் எதையும் தாங்கும் இதயத்தோடு வாழ்வதென்று முடிவு செய்துவிட்டான்.

பகலெல்லாம் வேலைதேடி அலைந்தான். இரவெல்லாம் தெருவிளக்கின் துணைகொண்டு எழுதினான்.

இப்படித்தான் அவன் எப்படியோ பசியும் பட்டினியுமாக வாழ்ந்து கொண்டிருந்தான்.

காலம்தான் ஓடிக்கொண்டிருந்ததே தவிர, அவன் வாழ்க்கை நிலை மட்டும் அப்படியே நின்ற நிலையிலேயேதானிருந்தது.

வாழ்க்கை கசந்துவிட்டது.

வாழ்வு வெறுத்துவிட்டது.

என்செய்வான்?

எங்குபோவான்?

வாழ்வின் முடிவைத் தேடிக் கடற்கரையை நாடிவிட்டான்.

○

நினைவலைகளிலிருந்து மீண்டுவிட்ட அவன் நெஞ்சம் குமுறும் அலைகடல்மேலேயே நிலைத்துவிட்டது. நிலைபெற்றுவிட்ட நெஞ்சத்தை மீட்க முடியாத அவன் விழிகள் இரு துளிகளைக் கடல் நீரோடு கலக்கவிட்டன.

இப்பொழுதுதான் அவன் தன் நிலை பெற்றான்.

கண்கள் குளமாயின.

உதடுகள் அசைந்தன.

"இளங்கோ! என்னருமைநண்பா! நீதானடா வீரன்! தமிழ்த் தியாகி!! நான்...நான்...கோழை. வாழ வழி தெரியாத நான், வயிற்றுப் பசியை அடக்கமுடியாமல் என்னையே அழித்துக்கொள்ள நினைத்துவிட்டேன். நீ...நீ தான் தமிழன்! மொழி காக்க உயிர்கொடுத்தாய். ஆம்! தமிழ் மகனே, தமிழ்காக்கத் தலை கொத்தாய்!"

இப்பொழுது அவனுக்கு அன்று கல்லூரி முதல்வர் கூறிய அறிவுரைகள் நினைவிற்கு வந்தன.

"வேலவன், உங்கள் இனப்பற்றும் மொழிப்பற்றையும் காணப்பெரு மகிழ்ச்சி. அதே நேரத்தில் அந்தப் பற்றும் பாசமும் வெறியாகிவிடக் கூடாது என்பதுதான் என் கவலை. ஆம் வேலவன்! நான் கூறும் அறிவுரைகள் இதுதான்; ஒரு மனிதனுக்கு எதிலும் பற்றும் பாசமும் தான்இருக்கவேண்டுமே தவிர, வெறி அல்ல."

"ஆம்! நான் கொண்டிருந்த வெறியை அன்றே முதல்வர் அறிவுறுத்தி இருக்கின்றார். நான்தான் உணர்ந்துகொள்ளவில்லை." தனக்குள் சொல்லிக்கொண்டான்.

துன்பம் மனிதனை விரைவிலே தன் நிலையை உணரவைத்துவிடுவதை வேலவன் தெரிந்துகொண்டான்.

தனது கடந்துபோன வாழ்க்கையில் நடந்து வந்த பாதைகளைத் திரும்பிப்பார்த்ததும் அவன் இதயம் வேதனையால் விம்மியது. கண்களோ இரத்தக்கண்ணீரை வடித்துக்கொண்டிருந்தன.

காலம் எவருடைய கண்ணீரையும் பொருட்படுத்துவதில்லை என்பதை அவன் உணர்ந்தபோது பெருமூச்சு வெளிப்பட்டது.

இருண்டு கிடந்த அவன் உணர்வுகள், இரண்டு இரும்புக் கரங்கள் இறுகப் பற்றியபோதுதான் விழிப்புற்றது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

இரண்டு காவலர்கள் அவனைப் பிடித்துக்கொண்டிருந்தார்கள். அது கண்டு அவன் ஒன்றும் புரியாமல் விழித்தான்.

'நான் என்னகுற்றம் செய்தேன்?'

வார்த்தைகள் வெளிவரவில்லை. இப்படி இதயத்துள் எழுந்த கேள்வி இதயத்தோடே கலந்துவிட்டது.

"திருட்டுக் கழுதை! தற்கொலை செய்துக்கவா பார்த்தே? நடடா ஸ்டேஷனுக்கு" என்று கழுத்தில் கைகொடுத்துத் தள்ளினான் அவர்களில் ஒருவன்.

தட்டுத் தடுமாறி மணலில் விழுந்தவனைச் சட்டையைப் பிடித்துத் தூக்கியவர்கள் இழுத்துக்கொண்டு போனார்கள் காவலர் நிலையத்தை நோக்கி.

இதயத்துச் சுமைகளை எல்லாம் நெஞ்சில் நிறுத்திக்கொண்டுவிட்ட அவன் மௌனமாகச் சென்று கொண்டிருந்தான்.

அன்று உள்ளத்தைக் காலின் கீழ் போட்டு மிதித்துக் கொண்டு நடந்து வந்ததால் இன்று அடைந்துவிட்ட பலனைக் கண்டதும் அவன் மௌனியாகிவிட்டான்.

சட்டம் — அவனைத்தான் இருட்டறைக்குள் அடைத்துக்கொண்டு விட்டது.

ஆம்! அவன் தற்கொலை செய்து கொள்ள முயன்ற குற்றத்திற்காக மூன்று ஆண்டுகள் தண்டிக்கப்பட்டான்.

சிறைக்குள் தள்ளப்பட்டுவிட்ட அவன், சிறைக் கம்பிகளுக்கு வெளியே வெறித்து நோக்கியவாறு பரந்த வெளியில் சிறகடித்துப் பறந்து திரியும் வானம்பாடிகளைப் பார்த்து அழுதுகொண்டிருந்தானும்; பார்த்தவர்கள் சொன்னார்கள்.

யாருக்குத் தெரியும்?

ஏன் அழுதான்?

எதற்காக அழுதான்?

ஆனால், அவன் மனட்சாட்சி மட்டும் இப்படித்தான் சொல்லியிருக்க வேண்டும்.

"என் உள்ளத்தை நான் மதித்தபொழுது அழுதுகொண்டிருக்கிறேன். ஆனால், இந்த உலகம் மட்டும்இன்னும் மதிக்கவில்லையே?"

ஆனால், உண்மை தெரியாதவர்கள் எல்லோரும் இப்படித்தான் கேட்டுக்கொண்டிருக்கின்றார்களாம்.

"ஏன் அழுதான்......?"

★

இலட்சியப்-புன்னகை!

—[குழலோன்]—

நான் அந்தச் சிற்றூருக்கு மாற்றலாகி வந்து ஒருவாரம்கூட ஆகவில்லை. அந்தச் சிறு ஊரை, இயற்கை எழில் பூத்த கிராமத்தின் வரிசையிலும் சேர்க்க முடியாது! நகரத்தின் நாகரிகப் பூச்சும் படிந்துவிடவில்லை அங்கு! இரண்டும் கெட்ட நிலையில் அவ்வூர் காட்சி அளித்தது. அவ்வூரில் பொழுது போகாமல் நான் பட்ட அவதி...அப்பப்பா! சொல்லும் தரமன்று.

அன்றுதான் முதன் முதலில், செங்குட்டுவனை அவ்வூர் உணவு விடுதியில் சந்திக்க நேர்ந்தது! அவர் முகம் ஏனோ என்னைக் கவர்ந்தது! நறுக்குத் தெறித்தது போன்ற அவர் பேச்சில் நல்ல தமிழ் ஒலி...என்னைப் போன்ற இளம் தமிழாசிரியர்களைக் கவர அது ஒன்று போதாதா?

விடுதியைவிட்டு அவர் சென்ற பிறகு, விடுதி முதலாளியை விசாரித்தேன்! அவரைப் பற்றி முதலாளி விளக்கியதே ஒரு தனி முறை!

'அந்த இளவெட்டுப் பயலா சார்? அது ஒரு தறுதலை! எப்போதும் அந்தக் கழகக்காரப் பசங்களோடு சேர்ந்துகிட்டு, பெரியவாளையெல்லாம் திட்டறதுதான் அவன் வேலை!'

......

நான் குறுக்கிட்டு, 'பெரியவர்களோ, சிறியவர்களோ தவறைச் சுட்டிக்காட்டுவதுதான் அறிவுடைமை. அது நோக்கும் கண்ணால் திட்டுவதாகப் புலப்படும் சிலருக்கு!' என்றேன்.

'அதைவிடுங்க! அவங்க அப்பா நிறைய சம்பாரிச்சு வைச்சுட்டு மண்டையைப் போட்டுட்டார்! ஆனால் இது, கழகக் கூட்டம், மாநாடு, தேர்தல் நிதி அது இதுன்னு பணத்தை ஒழிக்கிறது. இந்த ஊரிலேகூட ஒரு மன்றம் ஆரம்பிச்சிருக்கானுங்க, என்ற வெள்ளைப் பொருளை, கருப்புக் கண்ணாடிகொண்டு பார்த்து, அப்பொருள் கருமை நிறைந்தது என்று சாதிக்க முயன்று கொண்டிருந்த அவரிடம் விடைபெற்று என் அறைக்குச் சென்றேன். அன்றிரவெல்லாம், செங்குட்டுவன் என் நினைவுக்கு உணவானார்.

மறுநாள் மன்றத்திற்குச் சென்றிருந்தேன்! எதிர்காலம் சீர்திருந்த வேண்டும், மூட நம்பிக்கைகள் ஒழிய வேண்டும், கடந்ததை உணர்ந்து, நடப்பதைப் புரிந்து, வருவதை வகைசெய்து கொள்ள விழையும் இன எழுச்சிப் படைக்கு நம்மாலான உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம்கொண்ட எனக்கு, செங்குட்டுவனின் நட்புக்கிடைப்பது அரிதாக இல்லை. இனமல்லவோ இனத்தோடு சேரும்!

மன்றச் செயலாளர் செங்குட்டுவனின் உதவிகொண்டு, மாணவர்கள் சிலரைச் சேர்த்து, பேசும் திறனுக்குப் பயிற்றுவித்து வந்தேன். எங்களைப் பணமோ, பகட்டோ ஒன்று சேர்க்கவில்லை! பகுத்தறிவுக் கொள்கை விளக்கம் ஒன்று சேர்த்தது.

ஒருநாள் மாலை, வெங்கதிரோன், செங்கதிரோனாகக் காட்சி அளிக்க, வெட்கி மறைந்து மெல்லிய திரைச் சீலையின் பின்னிருந்து நோக்கும் பெண்போல் வெண்மை படர்ந்து காட்சி அளிக்கும் நிலவை இரசித்துக்கொண்டிருந்த என்னை, செங்குட்டுவன் உலுக்கி, 'மாறன்! அதோ பார் அந்த மரத்தடியில்!' என்றான். அங்கு, ஒளி மங்கிய மெல்லிருளில், இணைந்து நின்ற சிலைகளாகத் தோப்பின் நடுவே நின்றிருந்த காதலர்களைத்தான் சுட்டிக் காட்டினான்.

'ஏன்? இளம் காதலர்கள்போல் உள்ளது. வளரட்டும் அவர்கள் காதல்! வாழ விடட்டும் இவர்களை யாவது இச் சமுகம்!' என்றேன்.

'பாழாய்ப் போயிற்று! அக்காதல் கதாநாயகன் யார் தெரியுமா? அவன்தான் இவ்வூர் பண்ணையார் இராமசாமி மகன் சுப்பு! அப்பெண், நம் உணவு விடுதி முதலாளி மகள் அம்புஜம்!' என்றான்.

'அது சுப்பனாய் இருந்தால் என்ன? குப்பனாய் இருந்தால்தான் என்ன? காதல் மணம் வளரட்டும். அப்போதுதான், குடும்ப வாழ்க்கையில், ஒருவரை ஒருவர் நிறை குறை உணர்ந்து, புரிந்துகொண்டு வாழ முடியும்!' என்றேன்.

'அங்குதான் இருக்கிறது சிக்கல்! காதல் மனம், நிறையைக் கண்டு, குறையை மறந்துவிடுகிறது. அதனால், இருவருக்குமே துன்பம்! அந்தத் துன்பத்தை, ஆண் அலட்சியப் படுத்துகிறான். சமுகமும், அதன் கட்டுப்பாடுகளும் அவனை ஒன்றும் செய்வதில்லை. ஆனால் பெண்...? அப்பா! அவள் வாழ்க்கையே புயற் காற்றில் மூங்கிற் புதராக அலை பாய்கிறது! அவனைக் காதலிக்கும் அம்புஜத்திற்கே தெரியும், அவன் ஒரு 'அயோக்கியன்,' 'திருடன்' என்று. ஒரு சமயம், அவன் கோயில் நகையைத் திருடிவிட்டுப், போலீசில் நல்ல அடிபட்டான். ஆனால் அந்தச் சம்பவம், அத்துடன் மறைக்கப்பட்டது. அதன் பலன், இன்று பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளையாய், திரிந்து ஊரை ஏமாற்றி வருகிறான். ஆனாலும், அவளுக்கு அவனிடம் ஏதோ நம்பிக்கை. 'அவன் நம்வரை நல்லவன். நமக்காக எதையும் தியாகம் செய்வான்' என்ற பொய்மை உணர்வு, அவளின் இதயத்தில் நிரம்பி வழிகிறது. இல்லையென்றால், அவள் அவனுடன் பழக அவளுக்கென்ன பைத்தியமா?

ஆனால், அவன் ஒரு நாள், அப்பெண்ணைக்கெடுத்து, நடுத்தெருவில் நிற்க வைக்கப் போகிறான். நீதி கேட்க வருபவர்களிடம், கோயில் சிலை முன் கற்பூரம் அணைத்து, 'நான் அப்பெண்ணைப் பார்த்தது கூட இல்லை!' என்று ஆணை வைக்கப் போவதும் உண்மை! என்ன பெரிய 'தீர்க்கதரிசி' மாதிரிக் கூறுகிறாயே?' என்று எண்ணுகிறாயா? நீ இன்னும் உலகத்தை புத்தகத்திலும், குற்றமறியாப் பள்ளிச் சிறார்கள் முகத்திலும் காண முயன்று கொண்டிருக்கிறாய்! ஆனால் நான், உலகத்தை உணரப் புத்தகங்களை விட, அனுபவத்தை, வாழ்க்கையில் நடக்கும், சிறிய அன்றாட நிகழ்ச்சிகளைக் கொண்டு அறிய முயன்று, ஓரளவு பயின்றவன்.

அவன், அம்புஜத்தின் வாழ்க்கையைப் புனிதமான பெண்மையை பந்தயப்பொருளாக வைத்துச்சூதாட்டம் ஆடுகிறான். அவனைப் பொறுத்தவரை, வந்தவரை இலாபம்! நட்டம் தன் கணக்கில் ஏற்படும் என்றால், தயங்காமல் ஒதுங்கிக்கொள்வான். அவள் நிலையோ...? துணையின்றி, துயர்கொண்டு, வீட்டிலும் நிம்மதி

யின்றி, வேறு ஒருவனையும் மணக்க முடியாமல், சிதைந்த சிற்பமாக நிற்கப்போகிறாள்! காகங்களும், குருவிகளும் புகலிடமாகக் கருதப் போகிறது அந்தச் சிற்பத்தை! முடிவு...? சமுதாயத்தின், புழுதி படிந்த மற்றுமொரு ஏடு மறைந்து நின்று பெருஞ் சிரிப்புச் சிரிக்கும்! அந்த அட்டக்கம் நம்போன்றவர்கள் முன்வந்தால், அகங்கார சொற்களால் தீயிட்டுப் பொசுக்கும்!

இன்று நாம் கூறினால், நம்மையே தான் சாடுவார்கள்! இச்சமுகம் அப்படிப்பட்டது!

குழந்தைகளை, 'விளக்கிடம் போகாதே! தீ சுட்டுவிடும்' என்றால் கேட்காது. சூடு பட்டபிறகுதான், வேதனையை தன் உணர்வால் தெரிந்த பிறகுதான் திருந்துகிறது. சொல்பவர்கள் கூற்றுக்கு மதிப்பளிக்கிறது. 'சறுக்கி விழப்போகிறாய்' என்று அறிவுரை கூறினாலும் மதிக்கமாட்டார்கள். நம்மைப் பார்த்து, 'பைத்தியக்காரர்கள்' என்று கூறி ஏளனம் புரிவர்! சறுக்கி விழுந்த பிறகுதான் ஞானோதயம் உண்டாகும்! நம் அறிவுரையின் அருமை தெரியும். பயன் அறிந்த பைத்தியங்கள் என்று புரியும்'— நான் குறுக்கிட்டேன்......

"செங்குட்டுவன்! எனக்கு ஒரு எண்ணம் உண்டாகிறது. இந்தச் சம்பவத்தை நமது விடுதி முதலாளியிடம் கூறி எச்சரிக்கை செய்தால் ......" என்றேன்.

"மாறன்! இவ்வளவு நேரம் நான் கூறியதை நீ எந்த அளவுக்குப் புரிந்துகொண்டாய் என்று நினைக்கும்போது சிரிப்புத்தான் வருகிறது! நீ பள்ளிப் பிள்ளைகளுக்கு உலகைப் போதிக்கிறாயே தவிர, உனக்கு உலக அனுபவம் போதாது என்று கூறியதை நிரூபிக்கிறாய் இக்கேள்வி மூலம்! நீ பாம்பின் நாக்கைப் பார்த்திருக்கிறாய் அல்லவா? அது பிளவுபட்டு, இரண்டாக இருக்கும். அதுபோல், இந்த உலகத்திற்கும் இரண்டு நாக்குகள் உண்டு! நீ சொல்வதை முதலாளி நம்புவார் என்று எதிர்பார்க்கிறாயா? தன் பெண் மேல் பழி சுமத்திவிட்டதாகப் பறையறைந்து, உன்னையே நடுவீதிக்கு அழைத்து வந்துவிடுவார்! நீ ஒன்றும் புரியாமல் விழிக்க, உலகம் முதலாளி கூற்றை மெய்யென்று எண்ணி உன்னைக் காட்சிப்பொருளாக்கிப் பரிகசிக்கும்! ஆனால் நானே, அனுபவப்பட்டபிறகு, அவரே உன்னிடம் தன் குறைகளைக் கூறி அழுவார்! ஆகவே போகட்டும் என்று விட்டுவிடு. பொல்லாங்கு நமக்கெதற்கு" என்றான்.

"செங்குட்டுவன்! உலகைப் புரிந்துகொண்டதாகக் கூறும் நீ சமுதாயத்தை, பகுத்தறிவு பாசறையின் துணைகொண்டு திருத்த முனைந்துள்ள நீ, 'பொல்லாங்கு நமக்கெதற்கு?—போகட்டும் விட்டுவிடு!' என்றால், வேறு யாரப்பா, இது போன்ற சீரழிவைச் சீர்படுத்துவது? வழிமறித்துச்செல்லும் நச்சரவத்தை 'நாளை பார்த்துக் கொள்ளலாம்' என்று விட்டுவிடுவது பேதைமை அன்றோ?" என்றேன்.

"தவறாகப் புரிந்துகொண்டாய் மாறன். இன்று விட்டுவிடு செல்லட்டும்! 'நாளை கடிக்கவரும்போது அடித்துவிடலாம்' என்று நச்சரவத்தை விட்டுவிடக்கூடாது. ஆனால் தனக்கும், 'மனம்' என்ற ஒன்றிருக்கிறது என்று அறியாத மக்களை, நிதானமாக அறியவைக்க, அப்படி விட்டுத்தான் பிடிக்கவேண்டும். இல்லை என்றால், விழலுக்கிறைத்த நீராகிவிடும்! மக்கள் தொண்டு என்பது, மண்பானையில் நீர் நிறைப்பது போன்றது. சிறிது அமைதி நழுவினாலும், நீரும் பாழாகி கலமும் கலனாகி எப்பயனுமின்றிக் கெடும்!

அம்புஜத்திடமே சென்று, அன்புரை கூறினாலும், 'என்னை ஏமாற்றப்பார்க்கிறீர்கள்!' என்பாள்.

அவளின் கதாநாயகனிடம் சென்று 'ஐயா! அபலை அவள் அழுகவைக்காதே அவளின் எதிர்காலத்தை!' என்றால்,' என்காதலின் புனிதம் நீங்கள் அறியாதது! தலையிடவேண்டாம் அதில்!' என்று தூக்கி எறிந்துபேசுவான் அவன்.

ஆகவே, அவர்களைக் கலந்துமுடிவெடுப்பது, நெருப்பின் அருகில், மெழுகு வைத்ததுபோல் ஆகும். நாம், நம்மால் முடிந்த உதவியை அவசியம்நேரும்போது செய்வோம்!' என்றான்.

O

காலம் தன்வேலையைக்குறைவின்றிச் செய்தது! உலகம் எனும் நிலத்தில், நிமிடங்கள் என்ற மழைத்துளிகளால், மாதங்கள் என்ற பயிர் விளைந்தன. அவ்வருடக் கடைசித் தேர்வை முடித்துவிட்டு, ஊருக்குச் சென்றிருந்தேன்; அன்னையையும், தங்கையையும் பார்த்து வர.

ஊரில் அன்னை, தங்கையின் மணத்தைப்பற்றி நச்சரித்தாள். நான், அன்னையிடம் 'செங்குட்டுவனைப்பற்றிக் கூறித் தங்கைக்கு, அவனையே மணாளனாக்க முடிவு செய்தேன்.

ஒருவாறு விடுமுறையைக் கழித்துவிட்டுப் பழையபடி திரும்பினேன் செங்குட்டுவனிடம். இரண்டு மாதங்களில் நடந்த, மன்ற நடவடிக்கைகள், ஊரின் மாற்றங்கள் முதலியவைகளைக் கூறிக்கொண்டே வந்தவன், 'மாறன்! நாம் அன்று எதிர்பார்த்த அம்புஜத்தின் காதல் நாடகத்தில் சோகக் காட்சி அரங்கேற்றப் பட்டுவிட்டது. அவள் காதல் கதாநாயகன் காணமல் போய்விட்டான். உடன் அவளின் ஒரு உயிருடன், மற்றுமொரு உயிரைச் சேர்த்துவிட்டு மறைந்துவிட்டான். எங்கெங்கோ தேடியாகிவிட்டது. ம்......! பலன்தான் பூச்சியம்! உருவத்தால் ஆண்மையும், உள்ளத்தால் கோழையுமாக பிறந்துவிட்ட அவன், காதலிக்கத் தகுதியுள்ளவன்தானா?

அம்புஜத்தை சந்தித்தேன். அவள் அழுதவாறு இரவும் பகலும் ஓட்டுகிறாள் காலத்தை! பெண்ணை ஏசி ஓய்ந்த அவள் தந்தை, என்னிடம் கண்ணீர் விடுகிறார்! 'செங்குட்டுவன்! சீர்திருத்தம் செய்ய முனைந்த நீ, என் பெண்ணின் வாழ்க்கைக்கு ஏதாவது வழிகாட்ட மாட்டாயா?' என்று இறைஞ்சுகிறார். இம்மாதிரி, சமுதாயப்புரட்சிக்கு, நம்மைப்போன்ற பகுத்தறிவுவாதிகளை எவ்வளவு திட்டினாலும், பழித்தாலும் மக்கள் எத்துணை நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் பார்த்தாயா?' என்ற வினாக் குறியுடன் என்னை ஏறிட்டு நோக்கினான்.

எனக்கே ஒரே அதிர்ச்சி கலந்த வியப்பு! அவன் அன்று கூறியது, இன்று என் காதுகளில் மோதிச் சிதறியது. அவளிடம் சுப்பு அன்று கொஞ்சி நின்ற காட்சி, என் மனதில், நாடகத்தின், நிழற் காட்சி போல் தோன்றிக் கேலி புரிந்தது. அவள்முகம், அவன்முன், 'காதல் கனவல்ல, நல்லதொரு எதிர்காலத்திற்கு, நிகழ்ச்சிக் குறிப்பு' எனக் கூறுவதுபோல் அன்று காட்சி அளித்தது. ஆனால், அதே முகம், இன்று உலகத்திற்குப்பயந்து, காணமல் மறைந்துவிட்டது. 'பிறவிக் குணம் போலும்......?

'செங்குட்டுவன்! இப்பேதைப் பெண்ணின் வாழ்க்கைக்குத்தான் வழி என்ன? எனக்கு ஒன்றுமே புரியவில்லை!' என்றேன்.

'வழி!' — புன்னகை பிறந்தது, அவன் இதழ்களில் அலட்சியப் புன்

னகையாகத் தோன்றியது எனக்கு. 'ஒரே வழி! அணில் கடித்த மாங்கனியானாலும், சுவை கெட்டா போய் விடும்? பெருநோக்குக் கொண்டு, இலட்சியப் பயணத்திற்கு ஒரு சோதனையாகஎண்ணி, இதயத்தைப் பண்படுத்திக் கொண்டு, அந்நங்கையை மணமுடித்துக்கொண்டால்? என்ற வினாக்குறியால் என்னைச் சுண்டி இழுத்தான்.

'யார் முன் வருவார்கள்? அப்படி முன்வந்தாலும், அவள் தந்தை, சாதிமதத்தைக் காக்கவந்தவராயிற்றே! அவர் சம்மதிப்பாரா?' என்று எதிர் வினா தொடுத்தேன்.

'நிச்சயம் முன் வருவார்! அவர் இந்நிகழ்ச்சிகளைக் கேட்டறிந்தபின், என்னிடம்தான் முதலில் ஓடி வந்தார்! இந்த விடயம் நம்மைப்போன்ற ஒரு சிலரைத் தவிர, வேறு எவருக்கும் தெரியாது! இவை வெளிப்படும் முன், அம்மங்கையை மணமுடித்து விடவேண்டும் என்கிறார். ஆனால், மணமுடித்துக்கொள்ள முன் வருபவனிடம், இந்நிகழ்ச்சிகளைக் கூறி, முழுச்சம்மதத்தைப் பெற்றுத்தான், மணம் முடிக்க வேண்டும். இல்லையெனில், வாழ்க்கை, நல்ல ஆற்று நீர், கடலில் விழுவதுபோல், பயனின்றிப் போகும்!' என்றான். அப்போதுதான், அவன் புன்னகையின் பொருள் புரிந்தது. அது 'அலட்சியப் புன்னகையல்ல,' 'இலட்சியப் புன்னகை!'

அங்கு, நாங்கள் பேசியவைகளைக் கேட்டுக்கொண்டே வந்த ஆசைத் தம்பி, — மன்றத்தின் செயற்குழு உறுப்பினன்—ஒரு சிக்கலான கேள்வியை கேட்டான்.........

'செங்குட்டுவன்! நீங்கள்தான், அவளை மணமுடித்துக்கொள்ளக் கூடாதோ?'—என்று.

நான் ஆவலுடன் அவன் முகத்தை நோக்கினேன். ஓவியனின் மேசைமேல் சிதறி நிற்கும் வண்ணக் குழம்புகள்போல், பலவித உணர்ச்சிகளின் ஒரு வடிவம்,அவன் முகத்தில் பல நிறங்களை மாற்றியது. இறுதியில் கண்கலங்க, என்னை நோக்கிக் கூறினான், 'மாறன்! என்னைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?'

அவன் கேள்வியால், குழம்பி விட்ட நான், அதனின்றும் விடுதலை பெற, எதிர்க் கேள்வி போட்டேன், 'நான் உன்னைப்பற்றி என்ன நினைத்திருப்பேன், நினைப்பேன் என்று எண்ணுகிறாய்? எதிர்பார்க்கிறாய்?'

'நீ என்ன நினைத்தாலும் சரி! நான் கூறுவது இதுதான், நான் அம்புஜத்தை மணமுடித்துக் கொள்ள முடியாது"! நீ நினைக்கலாம், கொள்கை, சீர்திருத்தம் என்றெல்லாம் வாயளவு பேசும் இவன், நடைமுறையில் சொந்த வாழ்க்கையில் கோழையாய், சுயநலமிக்கவனாய் இருப்பான் போலும்! சீ! இவனும் ஒரு மனிதனா?' என்று. ஆனால், என் முடிவின் காரணத்தைக் கூறுகிறேன். பிறகு உன் தீர்ப்பைக் கூறு!

அழகு மஞ்சத்திலே, ஆனந்தப் பண்பாட, எண்ணக் கனவுகளால், எதிர்கால சாம்ராஜ்யத்தை எட்டிப் பிடித்துக்கொண்டிருந்த கோதை, மணமான மறுவாரம், அவ்வருமைக் கணவனை, இழந்துவிட்டாள்! கட்டிய மனக்கோட்டைகள் மணல் வீடாகச் சரிந்துவிட்டன! அவளின் சாம்ராஜ்யம் சாவூராகிவிட்டது! அழகு முகத்தில், அமைதி தவழும் அவள் நுதலில், மஞ்சள் குங்குமம் அணியச் சமுகம் தடை விதித்தது. வாழ்க்கை என்ற இன்ப ஏட்டின், மகிழ்ச்சி அத்தியாயத்தின், ஒரு வரியை, முதல் வரியைப் படிக்கு முன்னேயே, அப்புத்தகம் அவளிடமிருந்து பறித்து வீசியெறியப்பட்டு விட்டது. வேதனையால் அரித்து விட்டஇதயத்தைச்சுமக்கமுடியாமல் வாழ்க்கையின் எல்லைக்கு ஓடினாள்! ஆனால் நல்லவேளையாக, அவளைக் காப்பாற்றினேன். இல்லையெனில், இயற்கையின் பயங்கரத்தை, ஒரு முழக் கயிற்றுக்குள் கண்டிருப்பாள் காரிகை! அந்தப் பரிதாபத்திற்குரியவளுக்கு, இரக்கமின்றி வீசி எறியப்பட்ட, வாழ்க்கை ஏட்டை எடுத்தளித்துத் தொடர்ந்து படிக்க உதவுவதாக வாக்களித்து விட்டேன். அவளை மணந்துகொள்ளுவதாக, மறுமலர்ச்சி அளிப்பதாக, உறுதி கூறியிருக்கிறேன். அதனால்தான், அவள் இன்னமும் தன் உயிரை, உடலினுள் பூட்டிவைத்திருக்கிறாள்,! என்று இலட்சிய வெறி கண்களில் மின்னக் கூறினான்.

என் மனதில்,பழைய போராட்டம் மறைந்து,புதிய போராட்டம் ஆரம்பமாகியது! அம்புஜத்தை நானே மணந்துகொண்டால்...?நம் கொள்கையை வளர்க்க, முதலியார் ஐயர், நாயுடு, பிள்ளை, போன்ற மூடக் கொள்கைகளுக்கு உயிரூட்ட முனைந்தவர்களுக்கு, நம் கொள்கையின், இலட்சியத்தின் மகத்துவத்தைத்தெளிவுபடுத்த, இதைவிட ஒரு நிகழ்ச்சி, சூழ்நிலை, வாழ்க்கையில் ஏற்படுவது சாமானியமல்ல! ஆகவே, இந்த நல்லதொரு சூழ்நிலையை நான் பயன்படுத்திக்கொள்ள விழைந்தேன். துணிந்து என்போன்ற ஓரிருவர் சமுதாயப் புரட்சிக்கு வழிகாட்டி, முன்னேறினால், தானாக மற்றவர்களும் துணிவுடன் பின்பற்றுவர்! ஒரே கல்லில், இரண்டு கனிகள். அபலையின் வாழ்வும் புத்துயிர் பெறும்; சுப்பு போன்ற ஏமாற்றுக்காரர்களின் மனமும் புனிதம் பெறும். 'செங்குட்டுவன்! நீ வாழ்விழந்த வனிதைக்கு வாழ்வளிக்க முன்வந்தாய்! அதுபோல்—அம்புஜத்திற்கு,— அம்பு தைத்த புறாவுக்கு ஆறுதல் அளிப்பதுபோல்—வாழ்வளிக்க முன்வருகிறேன் நான். நான் அவளை மணமார விரும்பி, எவ்வித வெறுப்பும், இன்றி மணந்து கொள்கிறேன். இதைவிடக் கொள்கையின் புனிதத்தை விளக்கும் நல்லதொரு சூழ்நிலை நமக்கமையாது!'—என்றேன். செங்குட்டுவன் என்னை ஆரத் தழுவிக்கொண்டான். மகிழ்ச்சிப் பெருக்கால், 'கண்ணீர்த் துளிகள்' இமை புரண்டன. இருவரிடமும். அந்த இறுகிய தழுவலில், எங்கள் இதயம் ஒன்றுவதை உணர்ந்தோம்.

பாவம்! ஆசைத்தம்பி, தன் அவசரத்திற்கு, வருந்தி மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, எங்கள் மகிழ்ச்சியில் பங்கேற்றான்.

என் தங்கையைப் பற்றிய நினைவே மறந்துவிட்டது எனக்கு. ஆனாலும், அவளுக்கென்று ஒருவன் இல்லாமலா போய்விட்டான்? ஆசைத்தம்பிதான் அருகிலேயே இருந்தானே.

மற்றுமொரு நன்னாளில் தமிழ் வளர்த்த தலைவர் முன்னிலையில்; 'செங்குட்டுவன்—கோதை; நான்—அம்புஜம்; ஆசைத்தம்பி—அமுதா—என் தங்கை, மணவிழா நடந்தேறியது. எங்கும், மலர் மணத்துடன், சீர்திருத்த நறுமணம் கமழ்ந்து, வெறியூட்டியது. செங்குட்டுவன் இதழ்களில் அதே புன்னகை, 'இலட்சியப் புன்னகை!'

★

அதுவே அறம்

[லிடியா]

கூலசலப்பும் ஆரவாரமும் வெற்றுக் கேளிக்கைகளும் நிறைந்த பட்டணத்துச் சூழலிலிருந்து நாட்டுப்புறத்துக்கு வந்தேன். அதன் தனிமையில், அதன் இருளில், அதன் இயற்கையில் என் துயரங்கள் எல்லாம் போய்க் குடியேறின. என் மனத்தில் பெரும் சுமை இறங்கியதென ஒரு நல்லுணர்வு. என் நாட்டின் புகழ்கூறும் இனிய பாடலை என் உதடுகள் முணுமுணுத்தன. ஆனால் என் உள்ளத்தில் இன்னும் அமைதி இல்லை.

காற்றுப் பலமாய் வீசியது; சிற்றாற்றில் புதுவெள்ளம் அடங்காமல் ஓடியது. ஆனால் அவற்றைவிடப் பலமான புயல் என் உள்ளத்தில் வீசியது. அதைவிட அடங்காத வெள்ளம் என் மனத்தில் ஓடியது. அதில் அமைதியில்லை.

பறவைகள் மெல்லிய குரலில் இன்னிசை பாடின. விண்ணிலே மீன்கள் ஒளிவிட்டன. நம் பழம் பெருமைகளை, வீரத்தை, விடுதலையை, உலகு வியந்த நம் பெரும் வாழ்வை யாரோ எங்கிருந்தோ பாடிட கேட்டன என் செவிகள். ஆனாலும் என் உள்ளத்தில் அமைதியில்லை. என் இதய நாட்டின் இழிநிலையால் நான் கலங்கினேன்.

உலகத்தின் பேராற்றல்களில், விஞ்ஞான விளைவுகளில், பெரும் பட்டணங்களின் பொருள் வளர்ச்சியில், எனக்குப் பற்றில்லை. அவைகளை நான் விட்டுவிட்டேன். வயலில் உழைக்கும் உழவரின் உள்ளங்களில் உறைவிடம் தேடுகிறேன். அவர்களின் 'ஏலேலோ' பாட்டில், தெம்மாங்கில், ஏற்றப் பாட்டில் உழவுச் சிந்தில், நடவுக் கண்ணியில் என் நாட்டின் விடுதலைக் கீதம் இசைக்கப்படுவதை என் மனம் விழைகிறது. அதைக் கேட்டு அதில் ஒன்றித்துவிட எண்ணுகிறேன்.

ஏதுமறியாத ஏழைகளின் கண்களில் வியப்பைக் காண்கிறேன். அவர்களின் வாழ்வில் துயரத்தைக் காண்கிறேன். என் இதய கீதம் கீறப்படுகிறது. ஏன்? நாம் அனைவரும் அடிமைகள். நம் உணர்வும் உரிமையும் விலங்கிடப்பட்டுள்ளன திராவிட நாடு அடிமை நாடு. தில்லிப் பேரரசுக்குக் கப்பம் கட்டும் அடிமை நாடு.

எங்கள் தலைவர்கள் புதுவழி காட்டுகிறார்கள். அறவழி காட்டுகிறார்கள். இருளூரிலிருந்து ஒளியூருக்கு வழி காட்டுகிறார்கள். அடிமைப் பேட்டையிலிருந்து விடுதலைபுரத்துக்கு வழி காட்டுகிறார்கள். இவர்கள் உயிருள்ள வழி காட்டிகள். நடுச்சாலையில் நிற்கும் உயிரற்ற கைகாட்டி மரங்கள் அல்ல இவர்கள். கைகாட்டி, கையைக் காட்டுமேயன்றி நம்முடன் வராது! நம்மை அழைத்துச் செல்லாது! கைகாட்டி, வழிகாட்டியாகாது! நம் தலைவர்கள் வழி காட்டிகள். பயணம் செய்யும் மக்களையும் அழைத்துக்கொண்டு, ஏற்றிக்கொண்டு தானும் குறிப்பிட்ட இடம் போய்ச் சேருகின்ற இயங்கும் ஊர்தி போன்றவர்கள் நம் தலைவர்கள். இதோ அவர்கள் புதுப்பாட்டுப் பாடுகிறார்கள். ரோம் பாடாதது! கிரேக்கம் பாடாதது! சீனம் பாடாதது! எங்கள் தலைவர்கள் பாடுகிறார்கள்! நம் தலைவர்கள் பாடுகிறார்கள்!

"அறம் வெல்லும்! அறம் வெல்லும்!
திராவிடம் விடுதலை அடையும்!
அறம் வெல்லும்! அறம் வெல்லும்!"

ஆனாலும் இப்பாட்டை எல்லோரும் பாடவில்லை. ஏன் நாம் அடிமைகளானதால்தான். அடிமைகள் என்ற உணர்வும் இல்லாததால் தான்!

'நம் நாட்டில், நாம் அடிமைகளா? நம் வீட்டில் நாம் அடிமைகளா? யார் சொல்கிறார்கள்? அறியாமை! பச்சைப்பொய்! ஏமாறாதீர்கள்! மாய்கை! எல்லாம் மாய்கை! என்று ஒரு முரட்டுக் கூச்சல் கேட்கிறது. ஆற்றல்மிக்க கூச்சல். மக்கள் அதைக்கேட்டு அஞ்சுகிறார்கள்! ஆம் என்கிறார்கள்! என் மனம் கலங்குகிறது. எளியவர்களின் அறியாமை என்னும் குட்டையில் ஆட்சிப்பீடத்தில் உள்ளவர்கள் நிச்சலடிக்கிறார்கள்! விளையாடுகிறார்கள்! ஆனாலும் நான் நம்புகிறேன். இருள் விலகும்! அறியாமை நீங்கும்! நம் நாடு விடுதலை பெறும்! நம் துயரமெல்லாம் மாறும்! மகிழ்வடைவோம் நாம்! மாண்புறுவோம் நாம்!

கவிஞர்கள் பலருண்டு. தலைவர்கள் பற்பலருண்டு. தொண்டர்கள் எண்ணற்றவர். விடுதலை வீரர் கணக்கிலர், அறம் பாடுகிறார்கள்; அறம் நாடுகிறார்கள்; அறம் கூறுகிறார்கள்.

டில்லி அரசின் அடக்குமுறை—வெறுமை!
திராவிடத்தின் அறிவழியோ—முழுமை!
டில்லி அரசின் பேரரசு—வீழும்!
திராவிடத்தின் உரிமைப்போர்—வாழும்!!

ஆம்! அமெரிக்காவும், இரஷியாவும், அணுவாயுதங்களைக் காட்டி மிரட்டும் நாளில்தான், நாம் அறம் பேசுகிறோம்! அச்சம், காய்ச்சலென வாட்டுகிற நாட்களில்தான், நாம் நம்பிக்கையை விடாமலிருக்கிறோம். நம் முன்னோடிகளில் சிலர் செத்துப் போனார்கள். மிகச்சிலர் உயிரோடு செத்துப்போனார்கள். ஆனாலும் அவர்களின் கூற்றுக்களும் உரைகளும் நம்மோடு வாழ்கின்றன, நமக்குத் தெம்பூட்டுகின்றன. சிறைக்குள்ளே பலப்பலர். அவர்கள் அடைகாக்கிறார்கள். அடைக் காலம் முடிந்து சிறையினின்று வெளியில் வரும்பொழுது கருத்துக் குஞ்சுகளைக் கூட்டி வருவார்கள். அறம் என்னும் புதுப்பார்ப்பை அழைத்து வருவார்கள்; நம்மிடம் தருவார்கள். உயர்ந்த கற்சுவர்களுக்கு உள்ளேயிருந்தாலும், வலுவான கம்பிகளுக்கு அப்பாலிருந்தாலும், அவர்களைத் தழுவிய மென்காற்று எங்களை வந்து தழுவுகிறது. அவர்களுக்கும் எங்களுக்கும் ஒரே பகலவன் வெயில் தருகின்றான். அவர்கள் எண்ணுவதை நாங்கள் உணர்கிறோம்! அதுவே அறம்! ஆம்! அதுவே அறம்!

சிறைக்குள்ளே இருப்பவர்கள், சிறையிலேயே இருந்துவிடமாட்டார்கள். விரைவில் வருவார்கள். நம்மோடு சேர்வார்கள். அப்பொழுது நமக்குப் புத்துணர்ச்சி! புத்துயிர்! அடிமை விலங்கொடிக்கும் அறப்போர்! நம் தலைவர்கள் நம்மை அழைப்பர்! என் உடன் பிறப்பே! தங்கையே! தம்பியே! இப்பொழுதே தயாராகு! விடுதலைப்போர்! உரிமைப்போர்! அறப்போர்! இதை எண்ணும்பொழுதும் எழுதும் பொழுதும் எடுத்துக் கூறும்பொழுதும்தான் என் மனம் சற்று அமைதி பெறுகிறது!

"அறம் வெல்லும்! அறமே வெல்லும்!!"

4-ம் பக்கத் தொடர்ச்சி

இந்தச் சந்தர்ப்பத்தில் உலகத்தில் விடுதலை பெற்றுவரும் சின்னஞ்சிறு நாடுகள்பற்றி நாம் அறிந்துகொள்வது, நம் விடுதலை நோக்கை வலுவுறச் செய்யும். அதே வேளை திராவிடத்துக்கு விடுதலை தேவையில்லை என்று கூறுவோர், இந்தியா ஒரு நாடு என்று வறட்டுக் கூச்சல் கிளப்புவோர்தம் கூற்றுப் பொருளற்ற கூற்று என்று உணர்ந்துகொள்ளவும் உதவும்.

அண்மையில் உலகநாடுகள் அவையில் புதிய உறுப்பு நாடுகளாகச் சேர்ந்தவை சமைக்கா, ட்ரினிடாட், டொபேகோ ஆகிய நாடுகளாம். இவை அமெரிக்கக் கண்டத்தை யொட்டிய கரிபியன் கடற்பகுதி நாடுகள். ஆங்கிலேயனின் காலனி நாடுகளாக இருந்தவை.

165-ஆண்டுகள் அந்நியனின் பிடிக்குள் கிடந்த ட்ரினிடாடும், டொபோகோவும் சென்ற ஆகஸ்டு 31-அன்று விடுதலை பெற்றன. இவற்றில் ட்ரினிடாடில் வாழ்ந்துவரும் மொத்த மக்கள் தொகை 830,000. அதாவது நம்முடைய சென்னை நகரத்து மக்கள் தொகையில் இரண்டில் ஒரு பங்கிற்கும் குறைந்த தொகையினர். இவருள் 100-க்கு 36-விழுக்காட்டினர் இந்தியத் துணைக்கண்டத்தாரின் வழிவந்த மக்கள். மற்றவர்கள் சீனர், ஐரோப்பியா, யூதர், சிரியர், லெபானியர், வட-தென் அமெரிக்காக்களைச் சேர்ந்தோர்.

அமெரிக்கா கண்டம் என்னும் பெரிய கண்டத்தைக்கண்டுபிடிக்கும் வேலையில் ஈடுபட்ட கிறிஸ்டோபர் கொலம்பசு என்பான் அமெரிக்காவை நோக்கி வங்கம் ஏறிச் சென்றபோது வழியிலே—அமெரிக்கக் கண்டத்துக்கு அணித்தில் தென்பட்ட தீவாகும் ட்ரினிடாட். 1498-ஆகஸ்டுத் திங்களில் கொலம்பசு ட்ரினிடாட் மண்ணில் இறங்கினான். அவன் இறங்கிய இடம் போர்ட் ஆப் ஸ்பெயின் என்று ஆயிற்று. அதுவே இன்று ட்ரினிடாடின் தலைநகர். அந்நகரில் பறந்து கொண்டிருந்த யூனியன் ஜாக் இறக்கப்பட்டுவிட்டது. அந்த நாட்டுக் கொடியாம் சிவப்பு, கறுப்பு, வெள்ளை ஆகிய வண்ணங்கள் கொண்ட கொடி ஏற்றப்பட்டுவிட்டது. அந்நிகழ்ச்சி அந்த நாட்டின் உரிமை பெறும் வைபத்தின் சிறப்பு நிகழ்ச்சி.

கொலம்பசுக்குப் பிறகு ட்ரினிடாடுக்குச்சென்றவர்களில் வரலாற்றுச் சிறப்புப் பெற்றவர் சர் வால்டர்ராலி என்பார். 1789-ம் ஆண்டு பிரஞ்சு நாட்டில் நிகழ்ந்த பெரும் புரட்சியின் போது, பிரஞ்சு நாட்டிலிருந்து பல பிரெஞ்சுக் குடும்பங்கள் ட்ரினிடாடில் வந்துதான் தஞ்சம் புகுந்து கிடந்தன. கடைசியாக 1797-ல் பிரெஞ்சுக்காரரிடமிருந்து ஒரு ஒப்பந்தத்தின்மூலம் பிரிட்டானியர் ட்ரினிடாடைப் பெற்றுக்கொண்டனர்.

இன்று ட்ரினிடாட் மக்கள் கரிபியன் தீவுக் கூட்டத்திடையே சிறந்ததொரு வாழ்க்கைத் தரம் பெற்றோர்களாகச் சிறப்பு வாழ்வு வாழ்கின்றனர். அந்தத் தீவு, தொழில் வளத்துக்கான வாய்ப்புக்கள் எல்லாம் ஒருங்கே பெற்ற தீவு. பிரிட்டிசு காமன்வெல்த் நாடுகளில் மிகப் பெரிய எண்ணெய்த் தூய்மியினை உடைய நாடு அந்நாடு. அந்நாட்டின் ஏற்றுமதிப் பொருள்களில் 100க்கு 82 விழுக்காடு பெட்ரோலியப் பொருள்களாம். மற்றவை சர்க்கரையும், ஏனைய உணவுப் பண்டங்களும்.

1845க்கும் 1917க்கும் இடையில் அங்கே உழைப்பதற்கென இந்தத் துணைக்கண்டத்து மக்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் பட்டபாட்டின் பயனையெல்லாம் மூன்று தலைமுறைக்குப் பிறகு அவர்கள் வழிவந்தோர் இன்று அங்கு அனுபவிக்கின்றனர். அவ்வழி வந்தோருள் இருவர் இன்று அந்த நாட்டின் அமைச்சராக இருக்கின்றனர். ஒருவர் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவராக அமர்ந்துள்ளார்.

அண்மையில் பிரிட்டனில் நடந்த காமன்வெல்த் மாநாட்டிற்கு, காமன்வெல்த் நாடுகளில் ஒன்றன் தலைவராக ட்ரினிடாட் டொபேகோவின் தலைமையமைச்சர்எரிக் வில்லியம்ஸ் என்பாரும் வருகை தந்திருந்தார்.

மக்கள் தொகையில் உலகில் இரண்டாவதாக நிற்கும் ஒரு துணைக் கண்டத்தின் ஏகபோகப் பேராளர் தாமே என்று கூறிக்கொண்டு அந்தக் காமன்வெல்த் தலைமையமைச்சர்களின் மாநாட்டில் கலந்துகொண்ட நேரு அவர்கள் எந்த அந்தஸ்தோடு அங்கு சென்றாரோ, அதே அந்தஸ்தோடுதான் மற்றும் அங்கே வருகை தந்திருந்த கானடாவின் டைபன் பேக்கரோடும், ஆஸ்திரேலியாவின் மென்சிசோடும் டாக்டர் எரிக் வில்லியம்ஸ் என்பாரும் சென்றிருந்தார் — அமர்ந்திருந்தார் வெறும் 9 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட சின்னஞ்சிறிய நாட்டின் பேராளராக எரிக் வில்லியம்ஸ் வந்துள்ளார். அவரோடு நாங்கள் சரிசமமாக அமரமாட்டோம் என்று மால்பரோ மாளிகைக்கு வருகை தந்திருந்த ஏனைய காமன்வெல்த் நாட்டுத் தலைமையமைச்சர் யாரும் அங்கே மறுப்புத் தெரிவிக்க முனையவில்லை. மாறாக காமன்வெல்த் உறுப்பினர்களின் பலம்—எண்ணிக்கை – பெருகியிருப்பதற்கு மகிழ்ச்சியே தெரிவித்திருப்பர்.

இங்கே, எரிக் வில்லியம்சைப் பற்றிய சில செய்திகளைக் கூறுவது பொருந்தும்.

டாக்டர் எரிக் வில்லியம்ஸ் ட்ரினிடாடின் விடுதலைக்காகவும், அதன் நல்வாழ்வுக்காகவும் கடந்த இருபதாண்டு காலமாக உழைத்து வந்திருக்கிறார். அங்குள்ள நீக்ரோக்களையும், இந்தியர்களையும்,வெள்ளையரையும், லெபனனியர்களையும், சிரியரையும்—இந்த இனம் எல்லாம் கலந்து கிடக்கும் கூட்டினரையும் ஒரே மூல முழக்கத்தோடு, ஒரே குறிக்கோளுக்காக ஒன்று திரண்டு நிற்கச்செய்த பெருமை டாக்டர் வில்லியம்சையே சாரும். 51 ஆண்டுகளுக்கு முன்னே ட்ரினிடாட் மண்ணிற் பிறந்தவர் டாக்டர் வில்லியம்ஸ். உடன்பிறந்தவர்கள் பன்னிருவருக்கு மூத்தவராகப் பிறந்தவர் இவர். அவரே ஒரு கலப்புக் கொடி வழியைச் சார்ந்தவர். இவர் தாயார் ஒரு நீக்ரோ. தந்தை ஒரு இந்தியர். அவரோ தம்மையொரு மேற்கிந்தியர் என்று சொல்லிக்கொள்வதைவிட வேறு எவ்வாறும் கருதியறியார்.

கல்லூரிப் புகுமுக வகுப்புவரை போர்ட் ஆப் ஸ்பெயினில் அவர் கல்வி பயின்றார். படிப்பில் அவர் காட்டிய திறமைஅவருக்குக் கல்விச் சலுகை வாங்கித் தந்தது. அதன் வழி குவீன்ஸ்ராயல் கல்லூரியில் அவர் பயிலும் வாய்ப்பினைப் பெற்றார். பிறகு அங்கிருந்து அந்தத் தீவின் கல்விச் சலுகையாக ஆக்ஸ்போர்டு காதரின் சொசைட்டியிற் பயிலும் வாய்ப்பினைப் பெற்றார். ஆக்ஸ்போர்டில் அவர் வரலாறு பயின்றார். இது 1932ல். ஆக்ஸ்போர்டில் அவர் அடைந்த அனுபவம் "ஆக்ஸ்போர்டில் ஒரு காலனிமுறை என்னும் சிறு நூலை அவர் எழுத உதவியது. அந்தப் புகழ்வாய்ந்த கல்லூரிச் சூழ்நிலை வில்லியம்சின் தன்னாட்சிக் கொள்கைக்கு முரண்விளைப்பதாகவும், அதனைச் சவாலுக்கழைப்பதாகவும் அமைந்திருந்தது. அதோடு அவருடைய தன்னாட்சி மனப்பான்

மையைத் தூண்டிவிடவும், ஊக்கிவிடவும் ஒருவகையில் அது உதவிற்று. அடிக்கடி அவர் கல்லூரித் தலைவர்களுடனும், ஏனைய—உடன் வதியும்—மாணவர்களுடனும் சிக்கலான பொருள்கள் பற்றி வாதங்கள் செய்தார். வாதத்தில் வெற்றி ஒவ்வொரு முறையும் அவருக்கே கிட்டியது."முதலாளித்துவமும்,அடிமைத்தனமும்'' என்று மற்றொரு நூலை அவர் எழுதினர். அது அந்தச் சமயம் எல்லாருடைய கவனத்தையும் ஈர்த்திருந்த பொருள் ஒன்றைப் பற்றி நடுநிலை நோக்கோடு ஆராயும் ஒரு நூல்.

டாக்டர் வில்லியம்ஸ் ஆக்ஸ்போர்டில் முதல் வகுப்பில் தேறினர். அந்த வெற்றி அவரை வாசிங்டனிலுள்ள ஆர்வார்டு (நீக்ரோ) பல்கலைக் கழகத்தில் அரசியல், சமுதாய நெறித்துறைப் பேராசிரியராக உயர்த்தியது. உள்ள உரத்தோடும் ஒருமை நெறியோடும், தன்னம்பிக்கையிலிருந்து சிறிதும் பின்வாங்கி விடாமல் அவர் ஆற்ற முனைந்த ஒவ்வொரு செயலையும் இனிதே இயற்றி முடித்தார். இனப் பாகுபாட்டின் பின்விளைவுகளை அங்கு அவரால் நன்கு தெரிந்துகொள்ள முடிந்தது. அந்த இனப் பாகுபாட்டை ஒழிப்பதற்கென அவர் தம்மையே ஒப்படைத்துக்கொண்டார். இந்த நோக்கோடு அவர் கரிபியன் குழு எனப்பட்ட குழுவில் ஒரு உறுப்பினராகச் சேர்ந்தார். அந்தக் குழுவே பின்னுல்ஆங்கிலோ அமெரிக்கக் குழுவென்ருயிற்று. அதில் டாக்டர் வில்லியம்சு 12 ஆண்டு காலம் தொண்டுபுரிந்தார். இந்தப்பணி மேற்கிந்தியத் தீவுகளின் நிலைகள்பற்றிய முழு விவரங்களையும் அறிந்துகொள்ளக்கூடியதொரு சிறப்பு வாய்ப்பினை அவர்பால் அளித்தது.

கரிபியன் குழுவில் அவர் ஆற்றிய பணி முடிவுற்ற பின்னர், அவர் திரும்பவும் டிரினிடாடுக்கு வந்தார். அங்கே அவர் தீவிர அரசியலிற் கலந்துகொண்டார். அந்தச் சமயம் அரசியலில் ஈடுபாடு கொண்டிருந்த தலைவர்கள் அங்கே தளர்ந்துபோய்க் கிடந்த சமயம். டாக்டர் வில்லியம்சைப் போன்ற ஊக்கமும் புரட்சிகரமான கொள்கையும் நிறைந்த ஒருவர் தேவைப்பட்டுக்கொண்டிருந்த சமயம். மக்கள் தேசிய இயக்கம் என்று ஒரு இயக்கத்தை அங்கு அவர் கண்டார். அவருடைய அறிவாராயும் தன்மையும், பேச்சுவன்மையும் மக்களிடையே அவருக்குப் பெரும் செல்வாக்கை உண்டாக்கியது. அவரைப் பின்பற்றுவோர் அந்தத் தீவிலே பெருந்தொகையினராயினர். அவருடைய கொள்கை தீவிரத் தன்மை வாய்ந்தது. அதே வேளை நேச பாசத்தின் நிறைவினையுடையது.

இனப் பாகுபாடு பற்றிய எதிர்ப்பினை அளவுக்கு மீறிய தீவிரத்தோடு நோக்குவது இருசாராரையுமே பேரிடருக்குள்ளாக்கிவிடும் என்பது அவருடைய தெளிந்த கருத்து.

"இன சமத்துவத்துக்கென நடத்தப்படுகின்ற போராட்டங்கள் எல்லாம் உலகிலேஉரிமை வாழ்வுக்காக நடத்தப்படும் போராட்டங்களின் பகுதிகளாகவே பொதுவில் நடத்தப்படுகின்றன. இதில் பங்கு பற்றிக் கொண்டிருக்கும் தனி மனிதனின் நிலை அவனுடைய சமுதாய பொருளாதாரச் சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டதாக அமைந்துள்ளது. அது நீக்ரோவாக இருந்தாலும் சரி, இந்தியனுக இருந்தாலும் சரி அவனுக்கு நியாய பூர்வமாகக் கிடைக்கவேண்டியஉயர்நிலை,அவன் அரசியல் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் அடைந்திருக்கின்ற உயர் நிலையை ஒட்டித்தான் அமைகிறது;அமைந்திருக்கின்றது'' இவ்வாறு டாக்டர் வில்லியம்ஸ் அவர்கள் தாம் எழுதியுள்ள 'கரிபியன் இனத் தொடர்பின் வரலாற்றுப் பின்னணி'' என்னும் நூலில் குறிப்பிடுகிருர்.

டாக்டர் வில்லியம்ஸ் எழுதியுள்ள ஆற்றல்வாய்ந்த நூல்களில் 'மக்கள் நாள் வந்துற்றது' என்னும் நூல் சிறப்பு வாய்ந்தது.

'மக்கள் நாள் வந்துற்றது' என்ற அந்த நூல் கரும்புத் தோட்டங்களில் உழைத்து வந்த இந்தியரையும் நீக்ரோக்களையும் வெள்ளையர் படுத்திய வெங்கொடுமைப் பாட்டினை விரித்துக் கூறுகின்றது. அந்த நூல் அரசியல், சமுதாயத் துறைகள் பற்றிய சிறப்பு வாய்ந்ததொரு உயர் நூலாக இன்று பலரால் கருதப்படுகிறது.

டிரினிடாட் அரசியல் சட்டதிருத்தத்திற்குப் பிறகு 1956ல் அங்கு நடந்த தேர்தலில் டிரினிடாட் டொபேகோஆகியவற்றின் தலைமையமைச்சராக டாக்டர் எரிக் வில்லியம்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

டாக்டர் எரிக் வில்லியம்ஸ் குள்ளமான கவர்ச்சியற்ற உருவினையுடையவர்தான். ஆனுல் அந்த உருவுக்குள் அமைந்து விளங்கிக் கொண்டிருக்கும் மன வளமும், உள்ள உரமும், மூளைக் கூர்மையும் மிகமிக உயர்வுடையன. உண்மையளவில் அவர்தம் உள்ளத்து ஆற்றல் மிகச் சிறப்பு வாய்ந்தது என்பதை விளக்க ஒரே ஒரு நிகழ்ச்சி போதும். ட்ரினிடாட், டொபேகோ ஆகிய இரண்டு பகுதிகளிலும் வாழ்கின்ற மக்களின் வரலாறு முழுதையும் எழுதி முடிக்க வேண்டுமென்று அவர் திடீரென்று ஒருநாள் எண்ணினர். அந்த வரலாற்று நூல் ட்ரினிடாடின் சுதந்திர தினத்தன்று மக்கள் கையிலிருக்க வேண்டுமென்றும் எண்ணினர். அப்போது ட்ரினிடாடின் சுதந்திர தினத்திற்கு முப்பதே முப்பது நாட்கள் தாம் இருந்தன. எனினும் அவர் உடனே எழுதத் தொடங்கினர். எண்ணியபடி ட்ரினிடாடின் சுதந்திர நாளும் வந்தது. அந்நாள் அந்த வரலாற்று நூலும் மக்கள் கையில் தவழ்ந்தது.

எங்கே விடுதலை உணர்வு மிகுந்துள்ள சான்ருேர்கள் மதிக்கப்படுகின்ருர்களோ, எங்கே உரிமை வாழ்வில் நாட்டம் மிகக் கொண்ட மக்கள் தலைவராம் நல்லோரின் வழி பெரும்பான்மையர் செல்கின்ருர்களோ, அங்கே வளம் உயரும், வாழ்வுயரும், மக்கள் நலம் உயரும் என்பதற்கு டிரினிடாட் நல்லதொரு எடுத்துக்காட்டு. அந்நாட்டின் தலைவராம் டாக்டர் எரிக் வில்லியம் ஒரு சிறப்புச் சான்று.

எனவே,

அடிமைத்தளையில் சிக்குண்டு கிடக்கும் திராவிடம் விடுதலை பெற்ற நன்னிலமாக மாறவேண்டுமானுல்,

போலித் தேசிய வாதிகளின் வெற்றுக் கூச்சல்கள் கேட்பாரற்றுப் போகவேண்டும். வறட்டு ஒருமைப்பாட்டுக்காரர்களின் விதண்டா வாதங்கள் சுவரில் எறிந்த பந்துகளாகி அவர்களிடமே திரும்பப் போய்த் தஞ்சம் புகுந்துகொள்ள வேண்டும்.

மாநில சுயாட்சி என்னும் வேலையற்ருரின் சாரமற்ற வார்த்தைகள் அவர் போலும் வேலையற்ருரால்கூட —இன்றுபோல் — மதிப்புப் பெருத நிலையிற் கிடந்து முடிவில் ஒரு பிடி சாம்பல் என மாய்தல் வேண்டும்!

விடுதலை உணர்வுகொண்ட நல்லோரின் தொகை பெருகுதல் வேண்டும்!

உரிமை வாழ்வில் விழைவுகொண்டோராக நாட்டு மக்கள் அனைவரும் உயர்தல் வேண்டும்! வாழிய நலனே! வாழிய திராவிடம்!

O

2-ம் பக்கத் தொடர்ச்சி

ணினத்துக்கு அழகு சொந்தமாய் இருந்தும் தன் மயிலினத்திற்கு அத்தகு வாய்ப்பில்லையே என்று சிந்தித்துச் சிந்தை வருந்துகின்ற காட்சி; ஊடல் கொள்ளும் பெண்களை நாட்டங்கொள்ளச் செய்வதற்கு ஆண்கள் படும்பாட்டைக் கேலி செய்வது போல் ஊடல் கொள்ளும் கிளி இரண்டு ஓடிவிளையாடும் காட்சி; என்று இவையாவும் காட்டி மெள்ள இறக்கினர் தோள்விட்டு.

இவ்வளவு நேரம் அவர் தோளிலா தோழி!

தோளில் துவள்கின்ற எனக்கு நேரம் எங்கேடி தெரிந்தது. ஆண்கள் தோளில் துவள்வதில் நமக்கு இன்பம். நம்மைச் சுமந்து திரிவது அவர்தம் இன்பம். இருவருக்கும் இடையில் இன்பம் கொள்ளை! கொள்ளை!! இடை கழிந்த நேரம் யாருக்கடி தெரியும்?

படித்துறையில் அமர்ந்து நீரின் அழகினைச் சுவைத்திருந்தோம். செவ்வல்லி மலரொன்று நீரில் மிதந்து வந்தது. அத்தான் மலரென்றேன். போயெடுத்து வாயென்று நீருள்ளே எனை இழுத்துத் தள்ளினர். நீந்தியோடி மலரெடுத்துச் சூடினர்.

நனைந்த உடையோடும் நடுங்குகின்ற உடலோடும் கரை வந்தமர்ந்தோம். குளிரின் கொடுமையை என்னால் தாளமுடியவில்லை. பற்கள் தாளமிடப் பார்த்துவிட்ட என் வாயிதழ்கள் ஓலமிட......இதுதான் சமயம் என்று எண்ணினரோ என்னவோ தோழி!

நனைந்த உடைமாற்ற வந்தாரோ?

உடை ஏதடி மாற்றுதற்கு! நடுங்கும் என் இதழ் காட்டி...கோதையே! உன் கோவைக் கனியிதழை இந்தக் கொடுங்குளிரேன் இப்படிக் கொடுமைபடுத்துகிறது எனக் கேட்டு! இரு இரு சொல்கிறேன் என்று குளிரிடத்துச் சொல்லி! கனியிதழே பொறு பொறு காக்கின்றேன் என்று என் இதழிடத்துச் சொல்லி! இதழோடு இதழ் சேர்த்தார். நெடுநேரம் சென்றதன்பின் இதழ் பிளந்தார். நான் நின் இதழுக்குப் போர்த்திய போர்வை எப்படி என்றவர்........கோதாய் குளிரென்ன நீங்கிற்று? எனக் கேட்டுச் சிரித்தார்.

குடிக்கின்றேன் தேன் என்று சொல்வதற்குப் பதிலாகக் கொல்கின்றேன் குளிரென்று சொல்லியிருக்கிறார் போலிருக்கிறது அந்தக் குறும்புக்காரர். ஏன் தலைவி இதழ் நடுக்கம் மட்டும்தான் தெரிந்ததோ அவருக்கு?

பேராசைக்காரியடி நீ. ஒரே மூச்சில் எல்லாவற்றையும் சொல்ல முடியுமா? மெல்லத்தான் கேளேன்.

சரி சரி சொல்லுங்கள்.

நனைந்துவிட்டதால் என் கச்சு இறுகிவிட்டதடி.

நல்ல இடம்தான்......நடந்ததை நயம் குறைக்காமல் சொல்லுங்கள் தலைவி.

திடுமென......நீ என் காதலி அல்ல என்றார். தீபட்ட புழுவாய்த் துடி துடித்தேன். ஏன் என்ற கேள்விக் குறியாகி நின்றேன். கேளென்று சொன்னர். சொல்லென்று நின்றேன்.

கச்சுக்கு உரிமை தந்து......என் கைகளுக்குப் பொறுமை தந்து வாட்டுகிறாயே! அதனால்தான். வேறல்ல கண்ணே எனச் சொன்னவர்......இது என்ன இதழில் இன்னுமா சிவப்பென்றும்; எடுக்கின்றேன் இரு என்றும்; வெறுக்கின்றேன் பொறு என்றும் சொல்லி என் இதழ் வெறுத்தார் இடைவளைத்து. கடைக்கண்ணால் அவர் நின்ற நிலை பார்த்தேன். படைகொண்டு தாக்கினாலும் நிலையறியா நிலையவர்க்கு.

இரவு எப்படிக் கழிந்ததோ?

யாருக்கடி தெரியும் இரவு எப்படிக் கழிந்ததென்று!

அனுபவம் இல்லாததால் அப்படிக் கேட்டுவிட்டேன். மன்னிக்கவும் தலைவி. பிறகு.

பிறகு, வண்டு வந்து தேன் குடிக்க, கற்றதெல்லாம் உங்களிடத்திலா என்று நான் அவரைக் கேட்டேன். மலர்ந்த மலர் தேன் கொடுக்கக் கற்றதெல்லாம் உன்னிடத்திலா என்று அவர் என்னைக் கேட்டார். கொம்புகள் கொடியணைக்கக் கற்றதெல்லாம் உங்களிடத்திலா என்று நான் அவரைக் கேட்டேன். கொடிகள் கொம்புகளைத் தழுவுதற்கு கற்றதெல்லாம் உன்னிடத்திலா என்று அவர் என்னைக் கேட்டார். காவியம் பிறந்தது உங்களின் பிறகே என்று நான் சொன்னேன். ஓவியம் பிறந்ததும் உனக்குப் பிறகே என்று அவர் சொன்னர். கன்னி நான் புரளவோ களம்போல் மார்பென்றேன். காதலன் நான் உண்ணவோ கனிபோல் கன்னமென்று அவர் என்னைக் கேட்டார்: இப்படி அவர் பேச்சில் நான் என்னையே மறந்திருந்தேன்.

உன் பேச்சில் அவர் தன்னையே மறந்திருந்தாரோ தலைவி.

அதுதாண்டி இல்லை! அவர் காரியத்தில் கண்ணும் கருத்துமானர். நான் என்னையே மறந்திருந்த நேரம் அவர்......அவர்......அவர், அந்தக் கூத்தை ஏனடி கேட்கிறாய்!

நல்ல நாணம் தலைவி உங்களுக்கு. என் உயிரை வாங்க என்று வந்ததே. அவர் அணைக்கின்றபோது இல்லாத நாணம் அவரை நினைக்கின்ற போதாவது வருகிறதே உங்களுக்கு!

போகட்டும் கேளடி! கதை பேசிக் கொண்டிருந்த அவர்......கள்வனைப் போல் கட்டவிழ்த்தார் பாவி.

கட்டவிழ்த்தாரா?

ஆமாண்டி. நீயொருத்தி! தொட்டுக் காட்டினால் போதாது. புட்டு புட்டு காட்டவேண்டும்.

கட்டவிழ்த்தார் என்றால் எனக்கென்ன தலைவி புரியும்....புரியும்படி சொன்னால்தானே!

கச்சவிழ்த்தாரடி......பச்சிளம் குழந்தைபோல். இப்பொழுதுதான் புரிந்ததோ! கச்சவிழ்த்தார் என்று

சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி எழுதுபவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

பொறுப்பாளர்.

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 / இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

அறிந்தவுடன்! ஐயயோ! என்று நான் அலற...! கச்சினை நீரெறிந்து ......ஐயயோ போனதே கச்சென்று கைகொட்டி அவர் சிரிக்க......! நாணத்தால் ...ன் மருண்டு ஓட! ...? மகன் ஓடிவந்து பின்னிருந்து என்னைப் பிடித்துக் கொணடார்.

ஐயயோ?

என்னடி ஐயயோ! நானும்தான் நாணத்தால் உடல்குன்ற நின்றேன். கச்சின்றி நானிருந்த நேரத்தில் இந்த நாணம்வேறு என்னைக் கட்டித் தழுவியதடி!

ஏதோ இத்தனை நாளும் இவர் தான் வந்து தளர்த்தவும் இறுக்கவும் செய்தவர்போல்...... உங்களைக் கொன்றிருக்கிருரே தலைவி!

வழியின்றிக் கொம்பணைந்த கொடியானேன். கொடியணைந்த கொம்பானுர். நெடுநேரம் நிலைமறந் தோம் சிலையானேம்.

கலைதவழும் சிலைகளே! நிலை மாற்றி எழுங்கள் என்றது ஒருகுரல். திடுக்கிட்டு எழுந்தேன்.

கேட்டாயோ தோழி என்ருள் ஒருத்தி.

பட்டுப்போன்ற நம் தலைவி உடலினை மொட்டுப்போலத் தொட்டணைத்த கட்டிளங் காளையவன் அழகினையா என்ருள் ஒருத்தி!

நம் தோழிகள்; கச்சில்லை என்பதை எங்கே கண்டுவிடுவார்களோ என்றஞ்சி...கண்டுவிட்டால் நாளைக் காலை காற்றினிலே பறக்குமேடி கதைகள் ஆயிரம் அதற்கஞ்சி...... கச்சில்லை என்பதனை மறைப்பதற்கு அவர் மார்பில் என்முகம் பொதித்தேன்.

அவர் மார்பில் உங்கள் மார்பை மறைத்தேன் என்பதை விளக்கமாகத்தான் சொல்லுங்களேன் தலைவி!

மீண்டும் அந்தக் குரல் ஒலித்ததடி! கேட்டாயோ தோழி என்ருள் ஒருத்தி.

தொட்டவுடன் துவண்டு கொம்பில் புரள்கின்ற கொடியான நம் பொற்கொடியின் எழிலினையா என்ருள் ஒருத்தி.

இல்லையடி இல்லை. வீடென்று ஒன்று உண்டென்று என்றேனும் நினைவுண்டோ என்று தலைவியிடம் கேட்டாயோ தோழி என்ருள் ஒருத்தி.

தலைவிக்கு நினைவில்லை என்ருலும், விடிவதற்குள் எம் தலைவியை வீடு கொண்டு சேர்ப்பாயோ என்றேனும் அந்தத் தலைவனிடம் கேட்டாயோ தோழி என்ருள் இன்னெருத்தி.

தோழியரும் மறைந்தார்கள். கோழியும் கூவிற்று! பிரியுமுன் அவருக்கோர் பரிசுதர எண்ணிக் காவில் முகைநெகிழும் மலர்கள் பல காட்டி இம்மலரில் எம்மலர் தேவை எனக்கேட்டேன்.

இம்மலரில் எம்மலரும் தேவையில்லை என உரைத்து; இளநகை பூத்து எழில்கொஞ்சும் நின் முக பூலரே தேவை என்ருர்.

உள்ளத்தைத் தொட்டிழுக்கும் கனிகள் பலகாட்டி இக்கனியுள்ளும் எக்கனி தேவை எனவினவி நின்றேன். தேன்பொழியும் இக்கனிகள் யாவையுமே தேவையில்லை என உரைத்து; முக்கனியின் சுவை யாவும் ஒக்க உடையதாம் நின் பனி தூங்கும் செவ்விதழ் எனும் கனியே தேவை என்ருர்.

கொடிகளிலே எக்கொடிகள் பிடிக்குமென்றேன். இக்கொடியைப் பிடிப்பதுபோல் எக்கொடியும் பிடிக்காது எனச்சொல்லி என்னை அள்ளி அணைத்துக்கொண்டார்.

தேனென்ருல் பிடிக்குமாமே எனக் கேட்டேன். நின் வாயூறும் தேன் தானே! பிடிக்கும் பிடிக்குமென்று, கொடு என்று கேளாமல் குடித்தார்.

கரும்பில் கடைவேண்டுமா அன்றி இடைவேண்டுமா எனக் கேட்டேன்!

பெண் உன் இடையும்; பேரழகு கண்ணின் கடையும் எனக்குக் கிடைக்கின்றபோது கரும்பில் கடையும் இடையும் எனக்கெதற்கு என்றணைத்தார்

கடைக்கண்ணுல் கொன்றேன் அவரை.

கண்ணைப்பார் கண்ணையென்று என்மீது பாய்ந்தார்.

கண்ணுள் புகுந்தாண்டி கள்வன் உடனே என் கண்ணை இறுக மூடிச் சிறைபிடித்தேன் கள்வரை நெடுநாளாய் ஏமாற்றிய அவரை இமைச் சிறையில் போட்டு நான் மகிழ்கிறேன்........இதையறியாமல் என்தாய் வந்து கண்ணைத் திற வென்று கதறுகிருளே! நல்லவேளை நீ வந்தாய்!

தலைவி ஒன்று செய்யுங்களேன்!

என்னடி தோழி! செய்கிறேன்!

அவர் யாரென்று எனக்கும் கொஞ்சம் காட்டுங்களேன்!

போடி! கண்ணைத் திறந்தால் கள்வன் ஓடிவிடுவான்!

எப்படித்தலைவி ஓடமுடியும். கதவுகள் அனைத்தையும் தாழிட்டு வைத்திருக்கிறேன் பயப்படாமல் திறவுங்கள். அவன் எங்கேயும் போக முடியாது!

சரியடி திறக்கிறேன் பார்...!

எங்கே தலைவி வரவேயில்லை அவன்! கனவாக இருக்கும் தலைவி

கனவுதானே தோழி......இவ்வளவும்......! சரிசரி நீ போய்வா நான் மீண்டும் கனவுகாணப்போகிறேன் என்று மீண்டும் படுக்கைக்குப் போகிருள் தலைவி!

இதோ அவளுறங்கும் பஞ்சணை ....!

"தளையவிழும் பூங்கோதைத்
தாயரே-ஆவி
களையினும் என்கைதிறந்து
காட்டேன்-வளைகொடுபோம்
வன்கண்ணன் வாள்மாறன்
மால்யானைத்-தன்னுடன்வந்த
என்கண் புகுந்தான் இரா"

—முத்தொள்ளாயிரம்

★

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணுதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.